23.10.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## எலுமிச்சை சொறி நோய்



எலுமிச்சை மரங்களைத் தாக்கும் நோய்களில் மிகவும் முக்கியமானது சொறி நோயாகும். இந்நோய் எலுமிச்சை பயிரிடப்படும் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றது. இந்நோய் ஒருவித பாக்டீரியாவினால் ஏற்படுகின்றது.

நோயின் அறிகுறிகள் : இலை, கிளை, சிறு கிளைகள், முள், காய் மற்றும் பழங்களிலும் சொறிப்புள்ளிகள் தோன்றும். குச்சிகளில் தோன்றும் சொறிப் புள்ளிகளினால் குச்சிகள் காய்ந்து விடும். காய்களில் தோன்றும் சொறிப் புள்ளிகளைச் சுற்றிலும் மஞ்சள் நிற வளையம் தோன்றும். பழங்களில் தோன்றும் சொறிப் புள்ளிகளில் வெடிப்புகள் தோன்றும். நோயினால் பழங்களின் தோல்பகுதி பாதிப்பிற்கு உள்ளாகின்றன. பழங்களில் சாறின் அளவும் குறைகின்றது.

சொறி நோயுற்ற பழங்களின் சந்தை மதிப்பு வெகுவாகக் குறைகின்றது. பழத்திலுள்ள சொறிப்புள்ளிகள் மற்றும் வெடிப்புகள் மற்ற அழுகல் நுண்ணுயிர்கள் உட்புக வழி உண்டாக்குகின்றன. சொறி நோயினை ஏற்படுத்தும் பாக்டீரியா, இலைத்துளைகள் மூலமாகவோ அல்லது பூச்சி அல்லது முட்களினால் ஏற்படும் காயங்கள் மூலமாகவோ, உட்புகுந்து தாக்குதலை துவங்குகின்றது. நோய் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கு மழைத்துளிகள், காற்று மற்றும் இலைதுளைக்கும் பூச்சிகள் மூலம் பரவுகின்றது.கட்டுப்படுத்தும் நுட்பங்கள் : நோயுற்று கீழே உதிர்ந்து விழுந்து கிடக்கும் இலைகளையும், சிறு குச்சிகளையும் சேகரித்து எரித்துவிட வேண்டும். மரங்கள் சிறப்பாக வளர நன்கு பரிந்துரைக்கப்பட்ட அளவு உரமிட்டு முறையாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பழத் தோட்டங்களில் நோயுற்ற மரங்களிலிருந்து நோயுற்ற சிறு குச்சிகளை வெட்டி தீயிட்டு அழிக்கவும். பின் கவாத்து செய்த உடன் 0.30 சதம் தாமிர ஆக்ஸிகுளோரைடு மருந்து தெளிக்க வேண்டும். இதனை தொடர்ந்து மூன்று முறை ஸ்ட்ரெப்டோசைக்கிளின் 100 பிபிஎம் (100மிலி கிராம் / 1 லிட்டர் தண்ணீர்) மற்றும் 0.30 சதம் தாமிர ஆக்ஸி குளோரைடு கலந்து ஒருமாத இடைவெளியில் தெளிக்க வேண்டும். மரம் துளிர்விடும் ஒவ்வொரு சமயமும், மரத்தின் அனைத்து பகுதிகளும் நன்றாக நனையுமாறு சூடோமோனஸ் புளுரசன்ஸ் 0.2 சத கரைசல் (2 கிராம் / 1 லிட்டர் தண்ணீர்) தெளித்தல் அவசியம். இவ்வகை பாக்டீரியா நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனஸ் புளுரசன்ஸ் 0.2 சத கரைசல் (2 கிராம் / 1லிட்டர் தண்ணீர்) தெளிக்கவும். 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். எலுமிச்சையில் தோன்றும் இலைத்துளைப்பான்கள் இந்நோயைப் பரப்புவதால் அவற்றை பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்து கட்டுப்படுத்துவது அவசியம். வேப்பம் பிண்ணாக்கு (5விழுக்காடு) கரைசலைத் தெளித்தும் இந்நோயினை பரப்பும் பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு திருவில்லிபுத்தூர், பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் **ம.குணசேகர் கேட்டுக் கொள்கிறார்.**

## மா இஞ்சி மாண்பு

மா இஞ்சி என்ற பழமையான வகை இஞ்சியில் உள்ளது. மா இஞ்சி என்றால், மாங்காய் இஞ்சி ஆகும். சாதாரண இஞ்சியைப் போன்றே மா இஞ்சி வளமையாக உள்ள ஓர் அரிய தாவரம். ஒரு மீட்டர் உயரம் அளவுக்கு வளர வல்லது. இதன் பசுமையான நீண்ட இலைகள், மிக்கவாறும் ஜதைகள் பலவாகக் காணப்படுகின்றன. இஞ்சிப் பகுதி பத்து சென்டி மீட்டர் நீளம் வரை தோன்றும். உள் பகுதி மஞ்சள் நிறமாகக் காணப்படும். கணுக்கள் ஆங்காங்கு நிரவியிருக்கும். நிழல் பாங்கான இடங்களில் இது சிறப்பாகப் பயிரிடப்படுகிறது. எனினும் மற்றைய வெளி இடங்களிலும் இது நன்கு வளரக் கூடியதே. இதன் மட்ட நிலத் தண்டிலிருந்து பச்சை மாங்காயின் நறுமணம் வருவதாலேயே இதற்கு மா இஞ்சி (மாங்காய் இஞ்சி) என்ற மாசற்ற பெயர் உண்டானது. சாதாரண இஞ்சியில் உள்ள கார அளவுக்கு, இந்த மா இஞ்சியில் காரம் இருப்பதில்லை. மட்ட நிலத்தண்டு வெளித் தோற்றத்தில் சாதாரண இஞ்சியைப் போன்றே இது காணப்படும். வெப்பமான மண்டலங்களிலே, தமிழ்நாட்டிலும், வியாபார முறையில் இது பயிரிடப்படுகிறது. உணவுப் பண்டங்களுக்கு வாசனை ஏற்படுத்துவதற்காகவே இது பெரிதும் பயனாகிறது. பிரதானமாக இது ஊறுகாய் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

நாவில் இட்டால் இது மிகவும் சுவையாக இருக்கும். சாதாரண இஞ்சியில் நார்கள் அதிகமாக உள்ளன. ஆனால், மா இஞ்சியில் நார் பாகம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. பயன்பாடுகளில் ஏறத்தாழ நான்கு மாதங்கள் வரை இது கேடுறாமல் இருப்பதால், அக்கால அளவுக்கு இதனைச் சேமித்து வைக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. சித்தா, ஆயுர்வேதா ஆகிய பழமையான மருத்துவ முறைகளிலே ஆஸ்துமா, ஜுரம், தோல் வியாதிகள் ஆகியவற்றை அகற்றவும், மலத்தை இளக்கவும் மா இஞ்சி பெரிதும் பயனாகிறது. திப்பிலியுடன் சேர்ந்து அரவையான மா இஞ்சி, மூலநோயைக் குணப்படுத்தவும், இரத்தத்தைச் சுத்தப்படுத்தவும் உபயோகமாகிறது. யுனானி மருத்துவ முறையில் அதீத உடற்சூட்டை மட்டுப்படுத்துவது, குடற்புழுக்களை மாய்ப்பது, இருமலைக் கட்டுப்படுத்துவது, இரத்தக் கொழுப்பைக் குறைப்பது,

சிறுநீர்த் தொல்லைகளைச் சீராக்குவது முதலானவற்றுக்கு மா இஞ்சி பெரிதும் பயன்படுகிறது. மா இஞ்சியின் மாண்பு மகத்தானது என்பதில் இனியும் ஐயம் உண்டோ?

**- எஸ்.நாகரத்தினம், விருதுநகர்.**

## சின்ன சின்ன செய்திகள்



**கரும்பு சாகுபடி - குருத்துப்புழு, தண்டுப்புழு- கட்டுப்பாடு :** இரசாயன பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தாமல் இயற்கை முறையில் எளிதாக அழிக்க முடியும் என்று தெரிவிக்கிறார் அனுபவ விவசாயி ஆர்.மோகன்குமார். இவர் கடந்த 5 ஆண்டுகளாக தேனி அருகே அன்னஞ்சியில் கரும்பு விவசாயத்தை மட்டுமே செய்து அதிக லாபம் ஈட்டி சாதனை படைத்து வருகிறார். ""கார்சீரா" என்னும் பூச்சிகள் மூலம் டிரைகோகிரம்மா ஜப்பானிகா என்ற முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. இதிலிருந்து வெளிவரும் பூச்சியிலிருந்து ஒட்டுண்ணி என்று அழைக்கப்படும் நுண்ணிய முட்டை கிடைக்கிறது. இந்த முட்டை ஒரு சி.சி. என்றழைக்கப்படும் ஏழுக்கு 10 என்ற சதுர சென்டி மீட்டர் கொண்ட ஓர் அட்டையில் 15 ஆயிரம் நுண்ணிய முட்டைகளை ஒட்டி கரும்பு நடவு செய்த 4 மாதங்களிலிருந்து 6 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை ஒட்ட வேண்டும். மூன்று சி.சி. அட்டைகளை கரும்பு சோகைக்கு இடையில் கட்டி விட்டால் அந்த முட்டைகள் ஒட்டுண்ணிப் பூச்சிகளை உருவாக்கிப் புழுக்களைத் தின்று எஞ்சிய புழுக்களின் உடலில் தன்னுடைய முட்டைகளை ஒட்டி விட்டுச் சென்று விடும். இதனால் புழுக்கள் முற்றிலும் அழிந்து விடும்.

இந்த ஒட்டுண்ணிகளை விவசாயியே உற்பத்தி செய்து, ஒரு அட்டையில் ஒட்டப்படும் ஒரு சி.சி. முட்டையின் விலை வெறும் ரூ.35 மட்டுமே என்று கூறுகிறார். ஒரு ஏக்கர் கரும்பு சாகுபடிக்கு 10 சி.சி. மட்டும் பயன்படுத்தினாலே போதும்.

பசுமைக்கூடம் தொழில்நுட்பம் : பசுமைக்குடில் என்று ஒளி ஊடுருவக்கூடிய கண்ணாடி (அ) பாலிதீன் கூரையினால் போர்த்தப்பட்ட

அமைப்பாகும். இதில் தேவைக்கு ஏற்றவாறு தட்பவெப்ப நிலைகளை கட்டுப்படுத்தலாம். தாவரங்கள் இரவில் வெளியிடுகிற கரியமிலவாயு உட்புறத்திலேயே தங்கி விடுவதால் பகல் நேரத்தில் தாவரத்திற்கு ஒளிச்சேர்க்கைக்கு அதிகப்படியான கரியமிலவாயு கிடைக்கிறது. எனவே 5 முதல் 10 மடங்கு அதிக அளவில் ஒளிச்சேர்க்கை நடைபெற்று விளைச்சல் அதிகமாகவும், தரமானதாகவும் அமைகிறது. மற்றும் சாகுபடி செய்யப்படும் மண் பரப்பில் இருந்து ஆவியாகும் நீரும் உட்புறத்திலேயே தங்கி விடுவதால் சொட்டுநீர் உரப்பாசனத்தில் சாகுபடி செய்வதன் மூலம் குறைந்த அளவு நீர் மற்றும் உரங்கள் மட்டுமே சாகுபடிக்கு தேவைப்படுகிறது.

பசுமைக்கூடத்தில் சாகுபடி செய்யப்படும் காய்கறிப் பயிர்கள், தக்காளி, குடைமிளகாய், வெள்ளரி, பீன்ஸ் மற்றும் கீரை வகைகள்.

**சோளரவைப் பொங்கல் :** தேவையான பொருட்கள் - சோள ரவை - 1 கப், பாசிப்பருப்பு- 1/4 கப், இஞ்சி - சிறிய துண்டு, மிளகு - 1/4 தேக்கரண்டி, சீரகம்-1/4 தேக்கரண்டி, நெய் - 2 தேக்கரண்டி, உப்பு - தேவைக்கேற்ப, பெருங்காயம்- 1 சிட்டிகை, கறிவேப்பிலை - 1 ஆர்க்கு. செய்முறை : பாசிப்பருப்பை வெறும் வாணலியில் வாசம் வரும் வரை வறுத்துக் கொள்ளவும். சுத்தம் செய்த சோள ரவை பாசிப்பருப்பு, உப்பு, 3 கப் தண்ணீர் சேர்த்து வேக விடவும். வெந்த கலவையை நன்கு கிளறவும். வாணலியில் நெய் சூடாக்கி மிளகு, சீரகம், பெருங்காயம், இஞ்சி, கறிவேப்பிலை தாளித்து, பொங்கலில் கொட்டி கிளறி பரிமாறவும். சுவை மிகுந்த சோள ரவைப் பொங்கல் தயார். தகவல் : கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், சென்னை-600 041.

**நிழவகைக் குடில் :** இவ்வகைக்குடில் காய்கறி சாகுபடி செய்வதற்கும், நாற்றங்கால் உற்பத்தி செய்வதற்கும் மிகவும் இலாபகரமானவை. நிழல்வகைக் குடில் கூரையாக 25 முதல் 75 விழுக்காடு நிழல் தரக்கூடிய நிழல்வலை கூரையாகப் போர்த்தப்படுகிறது. மேலும் பக்கச் சுவர்களுக்கு பதிலாக பூச்சிகள் உட்புகாத நைலான் வலை கொண்டு அமைக்கப்படுகிறது. பசுமைக்குடில் போன்று தொடர் கூடாரமாக இல்லாமல் பரப்பில் பெரியதாகவும், ஒரே வலைக் குடிலாகவும் எளிதாக

அமைக்க முடியும்.மேலும் தரமான கடினமான மரம், கல் மற்றும் கான்கிரீட் தூண்கள், அலுமினிய குழாய்கள், இரும்புக் குழாய்கள் கொண்டு நிழல்வலைக் குடிலை அமைக்கலாம். சமவெளிப்பிரதேசங்களில் காய்கறி சாகுபடிக்கு பச்சை நிற அல்லது கறுப்பு நிற 35 முதல் 50 விழுக்காடு நிழல் தரக்கூடிய வலை விரிப்புகளை பயன்படுத்தி காய்கறி உற்பத்தி செய்யலாம். இதனால் தக்காளி, குடைமிளகாய், பூக்கோசு, முட்டைகோஸ் போன்ற காய்கறிகளை பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இன்றி லாபகரமாக சாகுபடி செய்வதோடு நிழல்வலைக்குடில் மிகவும் ஏற்றது. நிழல்வலைக்குடிலை அமைக்கும் செலவு குறைவு. வீரிய ஒட்டு காய்கறி நாற்றங்கால், உற்பத்தி விலைமதிப்பு மிக்க காய்கறிகளின் உற்பத்தி செய்யலாம். தகவல் : பேராசிரியர் மற்றும் தகவல் காய்கறி பயிர்கள் துறை, தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 603. தொலைபேசி: 0422 - 661 1283.- **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**விளைநிலத்தை பாதுகாக்கும் தக்கைப்பூண்டு இயற்கை உரம்**



பழநி:பழநி பகுதியில் யூரியா தழைச்சத்து உரத்திற்கு பதிலாக, குறைந்த செலவில் மண்வளத்தை மேம்படுத்தி பாதுகாக்கும் இயற்கை பசுந்தாள் தக்கைப்பூண்டுகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.இரண்டு

ஆண்டுகளுக்கு பின் தற்போது பழநி பகுதியில் குறிப்பிட்ட அளவு மழைபெய்துள்ளதால், விவசாயிகள் வயலை உழுது, சாகுபடி பணிகளை மேற்கொண்டுள்ளனர். பொதுவாக நெற்பயிர் வளர தழைச்சத்து உரமாக விவசாயிகள் யூரியாவை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். விபரமான சில விவசாயிகளோ இயற்கை பசுந்தாள் உரமான தக்கைபூண்டு செடிகளை சாகுபடி செய்துள்ளனர். விவசாயி பாலமுருகன் கூறியதாவது: யூரியா ஒரு மூடை ரூ.285 முதல் 300வரை விற்கிறது. ஒரு ஏக்கருக்கு 3 மூடை அதாவது ரூ.1000 வரை செலவாகும். அதேசமயம் இயற்கை பசுந்தாள் உரமான தக்கை பூண்டு விதை ஒரு கிலோ ரூ.90. ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதைத்தால் 40 நாட்களில் நன்றாக வளர்ந்து 16 டன் பசுந்தாள் உரம் கிடைக்கும். அவற்றை அப்படியே மடக்கி உழுது மண்ணில் மக்கச்செய்து, 10 நாட்களுக்குப்பின் நெல் நாற்றுகளை நடவு செய்வார்கள். தக்கைபூண்டு வளரும்போது புற்கள், இதரசெடிகளும் உடன் வளர்ந்துவிடும். அவை மடக்கி உழவு செய்தபின், நெற்பயிர் உடன் அவ்வளவாக களைச்செடிகள் வளரவாய்ப்பு இல்லை. அந்த செலவு சேமிப்பாகும். ஏற்கனவே வேளாண்துறை சார்பில் தக்கைபூண்டு விதை வழங்கப்பட்டது. தற்போது வயலின் ஒருபகுதியில் தக்கைப்பூண்டு விதைக்க பரிந்துரைசெய்கின்றனர். அதிக நாட்கள் ஆகும் என்ற காரணத்தால் சில விவசாயிகள் மட்டுமே இம்முறையை பின்பற்றுகின்றனர், என்றார்.

### *சீலா கருவாடுவிலை வீழ்ச்சி*

ராமநாதபுரம் :ராமநாதபுரத்தில் சில மாதங்களுக்கு முன் ரூ.500க்கு விற்ற சீலா மீன் தற்போது ரூ.300க்கு விற்பனையாகிறது. சீலா கருவாடு விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த வாரம் ரூ.600க்கு விற்ற சீலா கருவாடு, தற்போது ரூ.400க்கு விற்கப்படுகிறது.

### வெற்றிலை கிலோ ரூ.150க்கு விற்பனை: விவசாயிகள் மகிழ்ச்சி

தேனி:வெற்றிலை கிலோ 150 ரூபாய்க்கு விற்பனையாவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தேனி மாவட்டத்தில் 250 எக்டேரில் வெற்றிலை சாகுபடி நடந்தது. சமீபத்தில் ஏற்பட்ட வாடல் நோய், வேர் அழுகல் நோயால் சாகுபடி பரப்பளவு படிப்படியாக

குறைந்து,

தற்போது 130 எக்டேரில் மட்டுமே வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வெற்றிலைகளில் கருப்பு மற்றும் வெள்ளை என இரு வகைகள் உள்ளன. பெரியகுளம், போடி பகுதிகளில் கருப்பு வெற்றிலையும், சின்னமனுார் பகுதியில் அதிகமாக வெள்ளை வெற்றிலையும் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதி விவசாயிகள் கொடிக்கால்களில் வெற்றிலைகளை பறித்து உள்ளூர் வியாபாரிகளிடம் விற்கின்றனர். சிலர் தேனி, மதுரை போன்ற நகரங்களுக்கு கொண்டு சென்று மொத்த வியாபாரிகளிடமும், பெரிய கடைகளிலும் நேரடியாக விற்பனை செய்கின்றனர். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு கருப்பு வெற்றிலை கிலோ ரூ.40க்கும், வெள்ளை வெற்றிலை ரூ.80 க்கும் விற்பனையானது. தற்போது விலை ஏறுமுகமாக உள்ளதால், கருப்பு வெற்றிலை கிலோ ரூ.80 க்கும், வெள்ளை வெற்றிலை ரூ.150 க்கும் விற்கப்படுகிறது. இதனால், பெட்டிக்கடைகளில் ரூ.5 க்கு குறைவாக வெற்றிலை விற்கப்படுவதில்லை. இந்த விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தாமரைக்குளம் விவசாயி ராமலிங்கம் கூறுகையில், “வெற்றிலை விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்து இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. கிலோ ரூ.150க்கு இதுவரை விற்றதே இல்லை. புதுச்சேரியில் பெய்த பலத்த மழையால் வெற்றிலை சாகுபடி பாதிக்கப்பட்டதால், தேனி மாவட்ட வெற்றிலைக்கு கடந்த 2 மாதங்களாக நல்ல விலை கிடைத்து வருகிறது.

தினமும் 10 பெட்டிக்கடைகளுக்கு வெற்றிலை சப்ளை செய்கிறேன். பங்குனி வரை விலை குறையாது,” என்றார்.

## வீட்டில் சூரிய ஒளி மின்சாரம் குறைந்தது கட்டணம்



காரைக்குடி:மொட்டை மாடியில் சோலார் அமைத்ததால் ஆயிரம் ரூபாய் மின் கட்டணம் செலுத்தியவர்கள், 10ல் ஒரு மடங்கு மட்டுமே கட்டணமாக செலுத்துகின்றனர்.தமிழகத்தில் 250 முதல் 300 நாட்கள் வரை முழுமையான சூரிய ஒளி கிடைக்கிறது. மின்வெட்டு பிரச்னை தீவிரமாகி வரும் நிலையில், மாற்றான சூரிய ஒளி மின்சாரத்தை தயாரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களுக்கு மத்திய அரசின் மரபுசரா எரிசக்தி துறை, தமிழக அரசின் எரிசக்தி மேம்பாட்டு முகமை (டெடா) மானியங்களை வழங்கி வருகிறது. ஒரு கிலோவாட் சூரிய மின்சக்தி அமைக்க மத்திய அரசு 30 சதவீதம், மாநில அரசு 20 சதவீதம் மானியம் வழங்குகிறது. காரைக்குடி மின்வாரிய கோட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் 8 பேர் இதுவரை சோலார் தகடுகளை வைத்து, மின் உற்பத்தி செய்வதுடன், மின்வாரியம் மூலம் வழங்கப்படும் 'நெட் மீட்டர்' மூலம் மற்ற வீடுகளுக்கும் வழங்கி வருகின்றனர்.

காரைக்குடி ஹவுசிங்போர்டு முருகானந்தம் கூறியதாவதுஒரு கிலோவாட் சோலார் பேனல் அமைக்க ரூ.ஒரு லட்சத்து 10 ஆயிரம் வரை செலவானது. மத்திய, மாநில அரசு மானியம் ரூ.50 ஆயிரம் கிடைத்தது. நாள் ஒன்றுக்கு நான்கு முதல் 5 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்

படுகிறது. கடந்த மாதம் 300 யூனிட் உற்பத்தியானதில், 50 யூனிட் மின்சாரத்தை மட்டும் பயன்படுத்தினேன். 250 யூனிட் மின்வாரியத்துக்கு அளிக்கப்பட்டது. இரவு நேரத்தில் மின்வாரியம் மூலம் நான் பயன்படுத்திய மின்சாரத்துக்கு ஈடாக இது கழித்து கொள்ளப்பட்டது. மாதம் ரூ. 1000 வரை மின் கட்டணம் செலுத்தி வந்தேன். கடந்த மாதம் 90 ரூபாய் கட்டணம் செலுத்தினேன், என்றார். மாதம் ரூ.500 ரூபாய் சேமிப்பு என்றால், ஓராண்டுக்கு ரூ.6000. 25 ஆண்டுக்கு ரூ.1.5 லட்சம். மானியம் போக இவர் செலுத்தியது ரூ.60 ஆயிரம். எனில் சேமிப்பு 90 ஆயிரம். வருங்காலத்தில் சோலார் பேனல்களின் விலை இன்னும் குறைய கூடும். இவற்றை அமைப்பதன் மூலம் பெருகி வரும் மின்தேவையை கட்டுப்படுத்த நாம் அரசுக்கு உதவி செய்கிறோம்.

**மாடித் தோட்டம் அமைக்க காத்திருப்பு கைக்கு வராத விதை, உபகரணங்கள், இப்படி பண்றாங்களே...!**

பொள்ளாச்சி: மாடி வீட்டு தோட்டம் அமைக்க விண்ணப்பம் கொடுத்து, மூன்று மாதங்களாகியும், விதை, உபகரணங்கள் கிடைக்காததால், பொள்ளாச்சி மக்கள் காத்திருக்கின்றனர்.சரிவிகித உணவின் அடிப்படையில், 85 கிராம் பழங்களையும், 300 கிராம் காய்கறிகளையும், தினமும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால், நாம், 120 கிராம் காய்கறிகளைத்தான் உட்கொள்கிறோம் என, புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. நகரங்களில் வசிக்கும் மக்களுக்கு, போதிய இடவசதி இல்லாததால், வீட்டு வளாகத்தில் தோட்டம் அமைக்க முடிவதில்லை. இதைக் கருதி, மொட்டை மாடியில் சிறியளவில் தோட்டம் அமைத்து, காய், கனி, மருந்து செடிகள், பூச்செடிகள், அலங்கார தாவரங்களை வளர்க்க வசதியாக, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி

வருகிறது.

வேளாண் சாகுபடி பரப்பு குறைந்து வரும் நிலையில், சாகுபடியை அதிகரிக்க, பல்வேறு யுக்திகள் கையாளப்பட்டு வருகின்றன. நவீன ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, குறைந்த பரப்பளவில், இருக்கும் நீரை பயன்படுத்தி, குறுகிய காலத்தில் கூடுதல் உற்பத்தி பெருக்கும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறைந்த நீரை பயன்படுத்தி, பந்தல் சாகுபடி மற்றும் முடாக்கு முறையில் காய்கறி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பொதுமக்களை ஊக்கப்படுத்துவதோடு, காய்கறி உற்பத்தியை அதிகரித்து, தன்னிறைவு பெறுவதற்காக மாடித்தோட்டம் அமைக்க அனைத்து உதவிகளையும் தோட்டக்கலைத்துறை செய்து வருகிறது. இதன் மூலம் பாசன நீரும், சாகுபடி பரப்பும் மிச்சப்படுத்தப்படுகிறது. தோட்டக்கலைத்துறை இதற்கான விதைகள், உபகரணங்களை மானியமாக வழங்குகிறது.

சென்னை, மதுரை, கோவையை தொடர்ந்து, நடப்பாண்டில், பொள்ளாச்சியும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வீட்டுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள், கீரைகள், மருத்துவ தாவரங்கள், மலர்ச்செடிகள் வளர்க்க மாடி வீட்டு தோட்டம் அமைக்கும் திட்டத்துக்கு கடந்த ஜூலை, 13ல் இருந்து விண்ணப்பம் வினியோகிக்கப்பட்டன. திட்டத்தில், 500 ரூபாய் மதிப்பிலான விதைகள், இயற்கை உரங்கள், தண்ணீர் தெளிப்பு கருவிகள், மொட்டை மாடியில் ஈரம் கசியாமல் தடுக்கும் பாலித்தீன் விரிப்புகள் மற்றும் தென்னை நார்கழிவு வழங்கப்படுகின்றன.அறிவிப்பு வெளியானவுடன், பொள்ளாச்சியில் உள்ள வடக்கு - தெற்கு ஒன்றியங்களில் தினம், 50 -70 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதுவரை, 700 பேர் பதிவு செய்துள்ளனர்.

மூன்று மாதங்களாகியும் இதுவரை விதைகளும், உபகரணங்களும் வழங்கவில்லை. எப்போது கிடைக்கும் என்று தெரியாத நிலையில், தமிழக அரசின் உத்தரவுக்கு, விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

## 6 லட்சம் டன் முந்திரிப் பழங்கள் வீணாவது தடுக்கப்படுமா? விவசாயிகள் பயன்பெற நடவடிக்கை தேவை



விருத்தாசலம்: தமிழகத்தில், ஆண்டுதோறும் வீணாகும் 6 லட்சம் டன் முந்திரி பழங்கள் வீணாவதைத் தடுக்க மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கவும், முந்திரி விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவில் கோவா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, தமிழகம் உள்ளிட்ட பகுதிகளில் 23 லட்சம் முந்திரி மரங்கள் பராமரிக்கப்படுகின்றன.

இதன் மூலம், ஆண்டுதோறும் 6 லட்சம் டன் முந்திரி கொட்டைகளும், 60 லட்சம் பழங்களும் உற்பத்தியாகின்றன. தமிழகத்தில் 3 லட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 60 ஆயிரம் டன் முந்திரி கொட்டைகளும், 6 லட்சம் டன் பழங்களும் உற்பத்தியாகின்றன. முந்திரி ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் புதிய வீரிய ஒட்டு ரகங்கள், தொழில் நுட்பங்களை கொச்சியில் உள்ள மத்திய அரசின் திட்டங்கள் மூலம் கோகோ மேம்பாட்டு நிறுவனம் முந்திரி உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனம் முந்திரி பழத்திலிருந்து பென்னி ஒயின் தயாரித்து சந்தைப்படுத்துகிறது. அதேபோல், கேரளா மாநிலம், மடக்கத்தாரா முந்திரி ஆராய்ச்சி மையம் மூலம் முந்திரி கூழ், பழச்சாறு, ஜாம், ஊறுகாய் போன்றவற்றை தயாரித்து சந்தைப்படுத்துகிறது.

இதனால், கோவா, கேரளா மாநில விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைப்பதோடு, வைட்டமின் 'சி' நிறைந்த மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் கிடைக்கிறது.

ஆனால், தமிழகத்தில் ஆண்டுதோறும் உற்பத்தியாகும் 6 லட்சம் டன் முந்திரி பழங்கள் மண்ணோடு மண்ணாக மக்கி வீணாகிறது. மத்திய அரசின் உணவுப் பாதுகாப்புத்துறை மற்றும் வேளாண் துறை நாட்டின் பல்வேறு பகுதிகளில் விளையும் உணவுப் பொருட்களை பாதுகாக்க தொழிற்சாலைகளை அமைத்துள்ளது.

எனவே, கேரளா, கோவா உள்ளிட்ட மாநிலங்களைப் பின்பற்றி தமிழகத்தில் ஆண்டுதோறும் 6 லட்சம் டன் முந்திரி பழங்கள் வீணாவதை தடுக்க மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## புதிய நெல் ரகத்தை அறுவடை செய்ய காத்திருப்பு:அதிக மகசூல் பெற விவசாயிகள் முயற்சி

பொன்னேரி:கூடுதல் மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், வழக்கமாக சாகுபடி செய்யும் நெல் ரகத்திற்கு மாற்றாக, புதிய வரவான, டி.கே.எம்.,13 ரகத்தை, முதன் முறையாக பயிரிட்டு, அறுவடைக்காக விவசாயிகள் காத்திருக்கின்றனர்.மீஞ்சூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட, பொன்னேரி, மெதுார், சின்னகாவணம், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், சம்பா பருவத்திற்காக, 26 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், நெல் பயிரிடப்பட்டு உள்ளது.

வழக்கமாக சம்பா பருவத்தில் பயிரிடப்படும் பாபட்லா பொன்னி, ரூபாலி, ஆடுதுறை 43 ஆகிய நெல் ரகங்களை பயிரிட்டு உள்ளனர். ஒரு சில விவசாயிகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

அறிமுகப்படுத்திய, டி.கே.எம்.,13 வகை நெல் ரகத்தை, பயிரிடும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர்.

முதன்முறையாக...காவிரி டெல்டா பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு வந்த இந்த நெல் வகை, தற்போது, திருவள்ளூர் மாவட்டத்தில், இந்த ஆண்டு, முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

இதன் அறுவடைக் காலம், 130 நாட்கள். இலை சுருட்டுப்புழு, குருத்துப்புழு, பச்சை தத்துப்பூச்சி ஆகியவற்றின் எதிர்ப்புத் திறனும், குலைநோய், துங்கரோ, செம்புள்ளி மற்றும் இலை உறை அழுகல் நோய் ஆகியவற்றை தாங்கும் திறனும் கொண்டது. பயிர், பூத்த 30 நாட்களில் அறுவடை செய்யலாம். மற்ற நெல் ரகங்கள், 1 ஏக்கருக்கு, 25 - 30 மூட்டை வரை மகசூல் கிடைக்கும். புதிய வரவான டி.கே.எம்.,13ல், 40 மூட்டை வரை மகசூல் கிடைக்கும் என, கூறப்படுகிறது.

வீரியம் குறைவதால்...மேலும், இதற்காகும் மருந்து இனங்களின் செலவு, பூச்சி தாக்குதல் உள்ளிட்டவை குறைவாக இருக்கும் என, கூறப்படுவதால், இந்த வகை நெல்லை பயிரிடுவதில் விவசாயிகள் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, இந்த நெல்லை பயிரிட்டுள்ள விவசாயிகள் கூறியதாவது:கடந்த, 15 ஆண்டுகளாக ஏற்கனவே இருக்கும் நெல் வகைகளை, பயிரிட்டு வருகிறோம். தொடர்ந்து அவற்றை பயிரிட்டு வருவதால், அவற்றின் வீரியம் குறைந்து, மகசூலும் குறைந்து வருகிறது.

புதிய வரவான டி.கே.எம்.,13 நல்ல வீரியம் கொண்டது. மானிய விலையில் கிடைத்த இந்த நெல் ரகத்தை, இப்பகுதியில் முதன்முறையாக பயிரிட்டு உள்ளோம். முதல் பருவத்தில், 40 மூட்டை வரையும், அடுத்தடுத்த பருவங்களில், அதைவிட கூடுதலாகவும் மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மற்ற ரக நெல்லை விட, இவற்றில், அதிக தூர்கள் உள்ளதால், நெல் மணிகளும் அதிகளவில் இருக்கும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதுகுறித்து, மீஞ்சூர் வேளாண் உதவி இயக்குனர் ரேவதி கூறுகையில், "ஒன்றியத்தில், 200 ஏக்கர் பரப்பளவில், இதை வகை நெல் முதன்முறையாக பயிரிட்டு உள்ளனர். தற்போது நல்ல நிலையில் நெற்பயிர்கள் வளர்ந்து உள்ளன," என்றார்.

### காய்கறி விலை சரிவு: இன்று தடபுடல் விருந்துதான்!

கோயம்பேடு:ஆயுதபூஜையை ஒட்டி, கோயம்பேடு சந்தையில், பழங்கள் மற்றும் பூக்களின் விலை உயர்ந்துள்ளது. ஆனால், காய்கறி விலை குறைந்துள்ளது. அதனால், இன்று சென்னை வாசிகள், அவியல், பொரியல், பச்சடி வைத்து, விருந்து சாப்பாடு சாப்பிடலாம்.

=ஆயுத பூஜை பண்டிகையை ஒட்டி, கோயம்பேடு சந்தைக்கு கடந்த வாரம் முதலே, காய்கறிகள், பூஜைக்கு தேவையான பொருட்களின் வரத்து அதிகரித்தது. பூஜைக்கு தேவையான தேங்காய், பெருமளவில் பொள்ளாச்சி, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் இருந்து கோயம்பேட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த வாரம், உரு ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு தேங்காய், நேற்று, கரு முதல் உ0 ரூபாய் வரை

விற்பனையானது

= வாழை மரம், ஒரு ஜோடி 60 ரூபாய்க்கு விற்பனையானது

= பூசணிக்காய் கிலோ 7 ரூபாய் வரை விற்பனை செய்யப்

படுகிறது

= அதேநேரம், ஆப்பிள், ஆரஞ்சு, சாத்துக்குடி பழங்களின் விலை விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோ, 100 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஆப்பிள், தற்போது கிலோ, 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நேற்று வரை, கிலோ, 25 ரூபாய்க்கு விற்கப்பட்ட சாத்துக்குடி, தற்போது, ச5 ரூபாயாகி விட்டது. அதேபோல், ஆரஞ்சு, மாதுளை, அன்னாசிப்பழங்களின் விலையும், கிலோவிற்கு, 10 முதல் 15 ரூபாய் உயர்ந்துள்ளதுமேலும், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பிற

மாநிலங்களில் இருந்து பூக்களின் வரத்து குறைந்ததால், அவற்றின் விலையும் உயர்ந்துள்ளது.

இதுகுறித்து, வாடிக்கையாளர்கள் கூறியதாவது:வழக்கமாக, பண்டிகை காலங்களில், காய்கறி விலை அதிகமாக இருக்கும். தற்போது நேர்மாறாக இருக்கிறது. ஆனால் பூஜைக்கு தேவையான ஆப்பிள், சாத்துக்குடி போன்ற பழங்களின் விலை தற்போது அதிகரித்திருப்பது, நடுத்தர மக்களை வெகுவாக பாதிக்கும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## சுற்றுலா தொழில் பொருட்காட்சி ரூ.4.40 கோடிக்கு ஒப்பந்தம்

சென்னை தீவுத்திடலில், தமிழ்நாடு சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி நடத்த 4.40 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

சென்னை, தீவுத் திடலில் ஆண்டு தோறும் சுற்றுலாத் துறை சார்பில், சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி நடைபெறும்.

70 நாட்கள்

அரசு நிறுவன அரங்குகள் 100, தனியார் அரங்குகள் 400, வர்த்தக அரங்குகள் 500, சிறிய விற்பனை நிலையங்கள், கேளிக்கை அரங்குகள் மற்றும் நடமாடும் விற்பனை நிலையங்கள், பூங்கா ரயில், உணவு விடுதிகள், கலை அரங்குகள் என, பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் அதில் இடம்பெறும்.டிசம்பர் 3வது வாரம் துவங்கி, 70 நாட்கள் நடைபெறும் இந்த பொருட்காட்சியை ஏராளமானோர் கண்டுகளிப்பர். அரங்குகள், விற்பனை நிலையங்களுக்கான ஒப்பந்தத்தில் அண்டை மாநிலங்களை சேர்ந்தவர்களும் பங்கேற்பர். சிறிய அரங்குகள் ரூ.50 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை ஒப்பந்தம் விடப்படும்.

இந்த ஒப்பந்தங்கள் மூலம், அரசுக்கு 5 கோடி ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். இது மட்டுமின்றி, நுழைவு கட்டணம், இதர வகைகள் மூலமும் அரசு வருவாய் ஈட்டுகிறது. ஒப்பந்தப் பணி முடிந்து நவம்பர் இறுதியில் பொருட்காட்சி மைதானத்தில் அரங்குகள் அமைக்கும் பணி

துவங்கும். டிசம்பர் இறுதியில் துவக்க விழா நடைபெறும். இந்த ஆண்டு பொருட்காட்சிக்கான ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

தொடர்புக்கு...

துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், '42வது சுற்றுலா பொருட்காட்சிக்கு 4.40 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்த விண்ணப்பங்கள் www.tamilnadutourism.org, www.tenders.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள், அக்டோபர் 29ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்' என்றார்.

**துவரம் பருப்பு விற்பனையை துவக்க தீவிரம் ! 11 இடங்களை அதிகாரிகள் தேர்வு**



மதுரை: நுகர்வோருக்கு குறைந்த விலையில் துவரம், உளுந்து பருப்பு கிடைக்க, மதுரையில் 11 இடங்களில் நவ., 1 முதல் கூட்டுறவுத்துறை மூலம் விற்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.துவரம் பருப்பு விலை சில நாட்களாக இரு மடங்கு உயர்ந்து உள்ளது. கூட்டுறவு துறை மூலம் ரேஷன் கடைகளில் போதியளவு துவரம், உளுந்து போன்ற பருப்பு வகைகள் சப்ளை செய்யப்படவில்லை என நுகர்வோர் குற்றம் சாட்டினர். நுகர்வோருக்கு குறைந்த விலையில் துவரம் பருப்பு விற்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

மதுரையில் கூட்டுறவு துறை மூலம் 11 இடங்களில் பருப்பு விற்க கலெக்டர் சுப்பிரமணியன், இணை பதிவாளர் வெங்கடேசன் நடவடிக்கை எடுத்துள்ளனர்.அதிகாரி ஒருவர் கூறியதாவது: மதுரையில் பாலஸ் ரோடு, திருநகர், அழகப்பன்நகர், டி.வி.எஸ்.நகர், பொன்னகரம், கே.கே.நகர், மதுராகோட்ஸ், பழங்காநத்தம், கோ.புதுார், அலங்காநல்லுார், திருப்பரங்குன்றத்திலுள்ள பாண்டியன் சூப்பர் மார்க்ெகட் கடைகளில் நவ., 1 முதல் துவரம் பருப்பு விற்பனை துவக்கப்படும். மாவட்டத்திலுள்ள பத்து தாலுகா தலைமையிடங்களிலும் பருப்பு விற்க பரிசீலிக்கப்படுகிறது. ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110க்கு விற்கப்படும், என்றார்.

**விவசாயிகள் கூட்டத்தில் பருப்பு விலை உயர்வு எதிரொலித்தது:பயறு சாகுபடியை அதிகரிக்க வலியுறுத்தல்**

மதுரை:பருப்பு விலை உயர்வு மதுரையில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் எதிரொலித்தது. துவரை உட்பட பயறு சாகுபடியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.கலெக்டர் சுப்பிரமணியன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் விவசாயிகள் விவாதம் வருமாறு:விவசாயி: மாடக்குளம் கண்மாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். தண்ணீர் தேக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.பொதுப்பணித்துறை அதிகாரி: ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

விவசாயி பாண்டியன்: விவசாயிகள் தங்கள் பயிர்களை காப்பீடு செய்துள்ளனர். சில விவசாயிகளுக்கு தண்ணீர் இன்றி பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கு காப்பீடு செய்திருந்தும், முழுமையாக பாதிக்கப்பட்டால் தான் இழப்பீடு வழங்க முடியும் என அதிகாரிகள் மறுக்கின்றனர்.

கலெக்டர்: பயிர்கள் பாதியாக பாதிக்கப்பட்டாலும் கூட காப்பீடு செய்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்க உயரதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்படும்.பாண்டியன்: வரும்முன் காக்க வேண்டும் என்பதன்படி பயறு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தற்போது துவரம் பருப்பு விலை இருமடங்கு அதிகரித்துள்ளது.

கூட்டுறவு சங்கங்கள் மூலம் துவரம் பருப்பு கிலோ ரூ.110க்கு விற்கப்படும் என அறிவித்த முதல்வர் ஜெயலலிதாவிற்கு நன்றி. மதுரை உட்பட தென் மாவட்டங்களில் பயறு சாகுபடி செய்ய ஏதுவாக தட்பவெப்ப நிலை, சூழ்நிலையுள்ளது. ஏற்கனவே துவரை, உளுந்து சாகுபடி ஓரளவு நடந்தது. மாவட்டத்தில் இறவை பாசனம் மூலம் துவரை உற்பத்திக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலெக்டர்: நவ., 1 முதல் மாவட்டத்தில் 11 இடங்களில் முதல்வர் அறிவித்தபடி துவரை, உளுந்து விற்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ரேஷன் கடைகளுக்கு 48 சதவீதம் உளுந்து, 70 சதவீதம் துவரை வரத்து வந்து, விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் பழனிச்சாமி: பயறு விதைகளை ஆடி, ஆவணியில் விவசாயிகளுக்கு வழங்கினால் தான் அவர்கள் ஆறு மாதங்களில் சாகுபடி செய்ய முடியும். தற்போது வழங்கினால், மழை காலமாக இருக்கிறது. பண்டிகை காலமாக இருப்பதால் பருப்பு விலை உயர்வால் மக்கள் அவதிப்படுகின்றனர்.

9700 டன் பயறு உற்பத்தி:தேசிய உணவு பாதுகாப்பு இயக்க ஆலோசகர் ராதாகிருஷ்ணன்: தேசிய உணவு பாதுகாப்பு இயக்க மானியத்துடன் மாவட்டத்தில் உளுந்து 400 எக்டேர், பாசிபயறு 400, பருத்தி செடிகளுக்குள் ஊடுருவல் பயறு வகை 400 என மொத்தம் 1200 எக்டேருக்கு பயறு சாகுபடி செய்யப்பட்டது. விதை மானியம், விதை நேர்த்தி, உயிர் உரம் மானியமாக விவசாயிகளுக்கு ரூ.4 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.5218 எக்டேரில் மாவட்டத்தில் திருமங்கலம், கள்ளிக்குடி, கல்லுப்பட்டி, செல்லம்பட்டி, சேடப்பட்டி, உசிலம்பட்டி ஒன்றியங்களில் பயறு சாகுபடி நடந்துள்ளது. நெல் வயல்களில் வரப்புகளில் 500 எக்டேருக்கு பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டு 9700 டன் பயறு

உற்பத்தி செய்ய இலக்குள்ளது.

விவசாயி கோபால

கிருஷ்ணன்: பயறு சாகுபடி குறித்து விவசாயிகள் கூட்டத்தை கூட்டி கருத்துரைகள் வழங்க வேண்டும்.

கலெக்டர்: பயறு சாகுபடியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு கடன் மறுப்பு

பழனிச்சாமி: திருமங்கலம் தாலுகாவில் திருமால், மொச்சிகுளம், பாறைக்குளம், கொக்குளத்தில் கரும்பு விவசாயிகள் தேசிய கூட்டுறவு ஆலைக்கு கரும்பு பதிவு செய்து விட்டு, தனியாரிடம் வட்டிக்கு கடன் வாங்கி பயிரிட்டுள்ளனர். வங்கிகள் கடந்தாண்டு நிலுவை இருப்பதாக கூறி, கரும்புக்கு கடன் கொடுக்க மறுக்கின்றனர்.வங்கி அதிகாரி: நிலுவையை செலுத்தினால் கடன் வழங்கப்படும்.

கலெக்டர்: விவசாயிகளுக்கு கடன் கொடுக்க மறுக்க கூடாது. நிலுவையிருந்தாலும் கூட அவர்கள் கோரும் கடன் தொகையில் பாதியை சிறப்பு திட்டத்தின்கீழ் வழங்கலாம்.

பணம் பறிக்க முயற்சிவிவசாயி ராஜமாணிக்கம்: கண்மாய்கள் மீன் குத்தகைக்கு விடப்படுகிறது. சிலர் தலையீட்டு பணம் வசூலிக்க முயலுகின்றனர்.

கலெக்டர்: அவர்கள் குறித்து தகவல் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜமாணிக்கம்: கண்மாய் கரைகளில் மரக்கன்றுகளை நடுவதை தவிர்த்து மற்ற பகுதிகளில் நட வேண்டும்.

கலெக்டர்: மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் மரங்களை நடுவதை ஒரு இயக்கமாக கொண்டு சென்று வருகிறோம். 1.22 லட்சம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

விவசாயி தேவராஜ்: கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு கடன் மறுக்கப்படுகிறது.

கலெக்டர்: மாவட்டத்தில் 2015-16ல் ரூ.101 கோடி விவசாய கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் ரூ.57 கோடி வரை வழங்கப்பட்டுள்ளது. கடன் வழங்க

மறுக்கும் வங்கி குறித்து தெரிவித்தால் நடவடிக்கை
எடுக்கப்படும்.

கூட்டுறவு இணை பதிவாளர் வெங்கடேசன்: 60 சதவீத விவசாய கடன்களும், 30 சதவீதமும் நகை கடன்களும் வழங்கப்பட்டுள்ளன. நகை கடனாக மட்டும் ரூ.220 கோடி வழங்கப்பட்டுள்ளது.

டி.ஆர்.ஓ., வேலுச்சாமி, வேளாண் இணை இயக்குனர் சாரநாத்பாபு, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வடிவேல்குமார், நுகர்பொருள் வாணிப கழக மண்டல பொது மேலாளர் ரொகோபயம் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

## சர்க்கார்பதியில் மின் உற்பத்தி 24 மெகாவாட்! தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

பொள்ளாச்சி: சர்க்கார்பதியிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், 24 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

பி.ஏ.பி., திட்ட தொகுப்பு அணைகளிலிருந்து, 49 கி.மீ., துாரம் மலைகளை குடைந்து கொண்டு அமைக்கப்பட்ட காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் கொண்டு வரப்பட்டு, திருமூர்த்தி அணையில் இருப்பு வைக்கப்படுகிறது.

பின், அணையிலிருந்து பி.ஏ.பி., திட்டத்துக்குட்பட்ட, நான்கு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்நிலையில், தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு, கடந்த ஏப்., மாதம் முதல் காண்டூர் கால்வாய் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பணிகள் முடிந்ததையடுத்து, கடந்த மாதம் 28ல் பரம்பிக்குளத்திலிருந்து பெருவாரிப்பள்ளம், துாணக்கடவு வழியாக சர்க்கார்பதிக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது. சர்க்கார்பதியிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு சென்று இருப்பு வைக்கப்படுகிறது.

காண்டூர் கால்வாய் வழியாக, 500 கன அடி தண்ணீர் சென்று கொண்டிருந்தது. தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதையடுத்து, 24 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது: கடந்த ஏப்., மாதம் சர்க்கார்பதி நீர்

மின்நிலையம் மூடப்பட்டது. தற்போது, சர்க்கார்பதியிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டதையடுத்து, கடந்த மாதம், 28 முதல் மின் உற்பத்தி துவங்கப்பட்டது.

முதலில், 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டதால், 12 மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டது.

பின், 18 மெகாவாட்டும், 900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டதால், 22 மெகாவாட் மின் உற்பத்தியும் செய்யப்பட்டது. தற்போது, சர்க்கார்பதியிலிருந்து, 1,050 கன அடி தண்ணீர் வினாடிக்கு திருமூர்த்தி அணைக்கு திறக்கப்பட்டுள்ளது. தண்ணீர் திறப்பு அதிகரிப்பு காரணமாக, சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்தில், 24 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. தண்ணீர் வரத்தினை பொறுத்து, மின் உற்பத்தி அதிகரிக்கப்படும். இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

**கரும்பில் செவ்வழுகல் நோய் வேகமாக... பரவுகிறது: தொடர் நஷ்டத்தால் விவசாயிகள் வேதனை**



கடலூர்:முற்றிலுமாக அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட செவ்வழுகல் நோய், மாவட்டத்தில் மீண்டும் கரும்பு பயிர்களில் வேகமாக பரவி வருவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

விவசாயத்தில் போதிய வருவாயின்றி விவசாயிகள் வேதனையில் இருந்த நிலையில், கோவை மற்றும் கடலூார் கரும்பு ஆராய்ச்சி நிலையங்கள் இணைந்து கண்டுபிடித்த அதிக மகசூல் மற்றும் நோய் எதிர்ப்பு தன்மை கொண்ட கோகா 671 ரக கரும்பு விவசாயிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

இந்நிலையில், இந்த ரக கரும்பில் புதிதாக செவ்வழுகல் நோய் வேகமாக பரவியது. இந்த நோய் தாக்கிய கரும்பு சர்க்கரை சத்து இழந்து தக்கை பாய்ந்து விடும். இதனால், எடை குறைந்து விவசாயிகளுக்கும், சர்க்கரை கட்டுமானம் இல்லாமல் ஆலை நிர்வாகங்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

இந்நோய் 'கொலிடேடிரைகாம் பில்கேட்டம்' என்ற பூஞ்சையினால் மண், நீர் மற்றும் காற்று மூலம் பரவுகிறது. இந்நோய் தாக்கிய கரும்பை வேருடன் முழுமையாக அகற்றுவதைத் தவிர நோயைக்கட்டுப்படுத்த வேறு வழியில்லாத நிலை ஏற்பட்டது. இதனால், விவசாயிகள் கரும்பு பயிரிடவே அஞ்சினர்.

அதனையொட்டி வேளாண் விஞ்ஞானிகள் கடும் முயற்சி மேற்கொண்டு செவ்வழுகல் நோய் தாக்குதலுக்கான கோகா 671 ரக கரும்பை முற்றிலுமாக அழித்தனர். அதன் மூலம் தமிழகத்தில் செவ்வழுகல் நோய் அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடலூார் மாவட்டத்தில், காட்டுமன்னார்கோவில் தாலுகாவில், எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் பரிந்துரையின் பேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கோகா-24; கோவி-356 ரக கரும்புகளில் செவ்வழுகல் நோய் வேகமாக பரவி வருகிறது.

இந்த சர்க்கரை ஆலைக்காக வரும் அறவைப் பட்டத்திற்காக காட்டுமன்னார்கோவில் மற்றும் சிதம்பரம் தாலுகாவில் 12 ஆயிரத்து 400 ஏக்கரில் கோவி-94101; கோக-24; கோவி-356; கோ 92102; கோ-86032 ஆகிய ரகங்கள் ஆலை நிர்வாகத்தின் பரிந்துரையின் பேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

அறுவடைக்கு இன்னும் இரண்டு மாதங்கள் உள்ள நிலையில், கானுார், பேரூர், நெடுஞ்சேரி, ஸ்ரீமுஷ்ணம், அகரம் ஆலம்பாடி, வீரமுடையாநத்தம் கிராமங்களில் 200 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள கோகா-24 மற்றும் கோவி-356 ரக கரும்புகளில் செவ்வழுகல் நோய் வேகமாக பரவி வருகிறது. இந்நோய் தாக்கிய கரும்பு தோகைகள் வெளுத்து மஞ்சள் நிறமாக மாறியுள்ளதால், கரும்பு தோட்டமே காய்ந்தது போல் காணப்படுகிறது.

இந்த நோய் காற்று மற்றும் தண்ணீர் மூலமாக பரவும் என்பதால் சுற்று வட்டாரத்தில் கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் எங்கே தங்கள் நிலத்தில் உள்ள கரும்பு பயிரிலும் நோய் தாக்கி விடுமோ என்ற அச்சத்தில் உள்ளனர். பொதுவாக ஒரு ஏக்கரில் 40 டன் கரும்பு வெட்டப்படும்.

ஆனால், செவ்வழுகல் நோய் தாக்கிய வயலில் ஏக்கருக்கு 15 டன் அளவே கரும்பு கிடைப்பதால், விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகள், நோய் பாதிக்கப்பட்ட கரும்புகளுக்கு இன்சூரன்ஸ் தொகை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஆனால், மாவட்ட நிர்வாகமோ, நோய் தாக்குதலுக்கு வழங்கப்பட மாட்டாது. இருப்பினும் மாற்று ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர். ஏற்கனவே கரும்புக்கு உரிய விலை கிடைக்காதது, அரசு அறிவித்த தொகையை ஆலை நிர்வாகம் வழங்காமல் காலம் கடத்தி வருவதால் விவசாயிகள் பாதிப்பிற்குள்ளான நிலையில் தற்போது பரவி வரும் செவ்வழுகல் நோயினால் மேலும் வேதனைக்கு உள்ளாகியுள்ளனர்.

### மஞ்சள் செடிகள் செழிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் செடிகள் செழிப்பாக வளர்ந்துள்ளது. கள்ளக்குறிச்சி அடுத்த கிராமப் பகுதிகளில் அதிகளவில், விவசாயிகள் மஞ்சள் பயிர் சாகுபடி

செய்து வருகின்றனர். மொத்தம் 10 மாத பயிரான மஞ்சள் செடிகளை விதைத்து, சில நாட்களாகவே அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் சாகுபடி செய்யப்பட்ட செடிகள் பெருமளவில் செழித்து வளர்ந்துள்ளன. மஞ்சளுக்கு மார்க்கெட் கமிட்டியில் அதிக விலை கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மஞ்சள் செடிகள் செழித்து வளர்ந்துள்ளதால், இதனை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் மளமள சரிவு: தரைதட்டி நின்றது மீன்வளத்துறை படகு**

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென சரிவதால், மீன்வளத்துறையின் இரு விசைப்படகுகள் தரை தட்டி நின்றது. தகவல் அறிந்த மீன்வளத்துறை ஊழியர்கள் விரைந்து சென்று படகை நீருக்குள் இழுத்து நிறுத்தினர்.

காவிரி நீர்பிடிப்பு பகுதியில் வடகிழக்கு பருவமழை தீவிரம் குறைந்ததால், மேட்டூர் அணை நீர்வரத்து வெகுவாக சரிந்து விட்டது. நேற்று அணைக்கு வினாடிக்கு, 2,740 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து வினாடிக்கு, 8,000 கனஅடி நீர் பாசனத்துக்கு வெளியேற்றுவதால், கடந்த, 16ம் தேதி, 68.150 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 62.300 அடியாக சரிந்தது. கடந்த, ஆறு நாளில் அணை நீர்மட்டம், 6 அடியும், நீர் இருப்பு, 5 டி.எம்.சி.,யும் குறைந்துள்ளது. அணை வலதுகரை பகுதியில் மீன்வளத்துறைக்கு சொந்தமான மூன்று விசைப்படகுகள் நீருக்குள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதில், இரு விசைப்படகுகள் பலத்த காற்றால் கரையோரம் ஒதுங்கிய நிலையில், அணை நீர்மட்டம் கடந்த இரு நாட்களில், 1.5 அடி சரிந்ததால், கரையில் தரைதட்டி நின்று விட்டது. கரை மணலில் நின்றால் விசைபடகு சேதமாகி விடும் என்பதால், தகவல் அறிந்த மீன்வளத்துறை ஊழியர்கள் நேற்று மதியம் இரு விசைபடகுகளையும் தண்ணீருக்குள் இழுத்து சென்று நிறுத்தினர்.

## முட்டை விலை 325 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 325 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 318 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 7 காசு உயர்த்தி, 325 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. புரட்டாசி விரதம் கடைபிடித்ததால், நுகர்வு குறைந்து முட்டை விலையில் சரிவு ஏற்பட்டது. தற்போது விரதம் முடிவடைந்ததை அடுத்து, முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது. அதனால், முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இது, பண்ணையாளர்களை மகிழ்ச்சி அடைச் செய்துள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 325, ஹைதராபாத், 301, விஜயவாடா, 300, பர்வாலா, 305, மும்பை, 339, மைசூர், 335, பெங்களூரு, 330, கொல்கத்தா, 331, டில்லி, 315. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 64 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டைக் கோழி விலையை, எவ்வித மாற்றமும் செய்யாமல் அதே நிலை நிர்ணயம் செய்யப்பட்டது. பல்லடத்தில், நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 65 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையை, 5 ரூபாய் உயர்த்தி, கிலோ, 70 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது.

## வாழைக்கன்று விலை குறைந்ததால் ரோட்டோரம் வீசி சென்ற விவசாயிகள்

கரூர்: கரூர் மாவட்டம் முழுவதும் நேற்று ஆயுதபூஜை கொண்டாடிய நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த வாழைக்கன்றுகள் விலை திடீரென குறைந்ததால், ரோட்டோரம் போட்டுச் சென்றனர். இதனால் ஆங்காங்கே மலை போல் குவிந்து காணப்பட்டது.

கரூர் மாவட்டத்தில் கொசுவலை உற்பத்தி நிறுவனங்கள், பஸ் பாடி கட்டும் தொழில், ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள், பிரபல வர்த்தக நிறுவனங்கள், நகைக்கடைகள், குவாரிகள், ஜவுளி குடோன்கள், லாரி, வேன், ஆட்டோ சங்கத்தினர் அதிகம் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஆண்டுதோறும் ஆயுதபூஜையை சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் வாயிலில் மாவிலை, தென்னங்குருத்து தோரணம்கட்டி, இரண்டு பக்கமும் வாழைக்கன்றுகளை கட்டுவர். அதன்படி நேற்று முன்தினம் மாலை, கரூர் மாவட்டம் முழுவதும் ஆயுதபூஜை களைகட்டியது.

இதற்காக பூஜைப்பொருட்கள் வாங்கி ஸ்வாமியை வழிபட்டனர். எலுமிச்சை மற்றும் பூசணிக்காயை வாங்கி திருஷ்டி கழித்தனர். அதன்பின், தொழிலாளர்களுக்கு பொரிகடலை வழங்கினர். இதில் ஆர்வமுடன் அனைத்து தொழிலாளர்களும் பங்கேற்றனர். கரூர் மாவட்டத்தில், குளித்தலை, லாலாபேட்டை, பெருகமணி, சிறுகமணி, வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கிருந்து குத்தகை அடிப்படையிலும், விவசாயிகள் நேரடியாகவும், வாழைக்கன்று கன்றுகளை கடந்த இரண்டு நாட்களுக்கு முன் வெட்டி எடுத்து வந்து, ஆயுதபூஜை விற்பனைக்காக வைத்திருந்தனர். அதிபட்சமாக ஒருஜோடி வாழைக்கன்று, 40 ரூபாய் வரை விற்கப்பட்டது. நேரம் ஆக, ஆக, வாழைக்கன்றுகள் பல்வேறு இடங்களில் குவிந்ததால், விலை குறையத் துவங்கியது. ஒருஜோடி வாழைக்கன்று திடீரென, 10 ரூபாய்க்கு விலை போனதால், வியாபாரிகள், விவசாயிகள் விரக்தியில், தாங்கள் கொண்டு வந்த வாழைக்கன்றுகளை ரோட்டோரம் போட்டு விட்டுச் சென்று விட்டனர். கரூரில் காமராஜர் மார்க்கெட், உழவர் சந்தை, ஜவஹர் பஜார், திண்ணப்பா தியேட்டர் கார்னர், திருச்சி ரோடு, கோவை ரோடு உள்ளிட்ட இடங்களில் ஆங்காங்கே வாழைக்கன்றுகள் மலைபோல் தேங்கிக் கிடந்தன. இதனால், நகராட்சி சார்பில், டிராக்டர் மற்றும் குப்பை அள்ளும் லாரிகள் மூலம் நேற்று மாலை வரை அப்புறப்படுத்தும் பணி நடந்தது.

## உயிர் உரங்கள் தயாரிப்பை நிறுத்தவேளாண் ஆணையர் திடீர் உத்தரவு

உத்தமபாளையம்:உத்தமபாளையத்தில் உள்ள உயிர் உரங்கள் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தும்படி மாநில வேளாண் ஆணையரகம் உத்தரவிட்டுள்ளது.

நெல், வாழை, பயறு வகைகள் சாகுபடிக்கு உயிர் உரங்கள் முக்கிய தேவையாக உள்ளன. பாஸ்போ பாக்டீரியா, அசோஸ்ஸ் பைரில்லம், ரைசோபியம் உள்ளிட்ட உயிர் உரங்கள் தயாரிக்க, தமிழ்நாட்டில் 15 மையங்கள் உள்ளன. தென் மாவட்டங்களில் தூத்துக்குடிக்கு அடுத்ததாக உத்தமபாளையத்தில் தான் இந்த உயிர் உரம் உற்பத்தி மையம் உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட இம்மையத்தில் உற்பத்தி செய்யப்படும் உயிர் உரங்கள் மதுரை, ராமநாதபுரம், கடலூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் விற்பனை செய்ய வேண்டும்.

ஆனால், கடந்த சில வாரங்களுக்கு முன்பு திடீரென உயிர் உரம் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தும்படி வேளாண் ஆணையரகம் உத்தரவிட்டுள்ளது. காரணம் உயிர் உரங்கள் தேவையை விட அதிகமாக இருப்பு இருப்பதாகவும், அவற்றை விற்பனை செய்தபின், உற்பத்தியை துவக்கலாம் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனால், உத்தமபாளையம் உற்பத்தி மையத்தில் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.இந்த மையத்தில் ஏற்கனவே ஆய்வக தொழில்நுட்ப பணியிடம் காலியாக இருந்தது. தற்போது உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதால், இங்கு பணியாற்றிய 2 வேளாண் அலுவலர்களில் ஒருவரை வேறு இடத்திற்கு மாற்றியுள்ள னர். உயிர் உரங்கள் உற்பத்தியை மீண்டும் துவக்க ஆணையர் அனுமதி வழங்குவதற்குள் ஆய்வக தொழில் நுட்ப அலுவலர் பணியிடம் மற்றும் வேளாண் அலுவலர் பணியிடங்களை நிரப்ப விவசாயத்துறை ஆணையர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## நெல் இயந்திர நடவு செயல் விளக்கம்

திருப்புத்தூர்:காவனூரில் வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு நெல் இயந்திர நடவு செயல் விளக்கம் அளித்தனர்.வேளாண் துணை அலுவலர் ஸ்ரீதரன் கூறுகையில்,"பாய் நாற்றங்கால் முறையில் நாற்றுக்கள் தயாரித்து இயந்திரம் மூலம் நடவு செய்வதால் ஆள் பற்றாக்குறையை சமாளிக்க முடியும். மேலும் இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ 2 ஆயிரம் இடுபொருள்,நடவுச் செலவினங்களுக்கு ரூ 3 ஆயிரம், பின் ஏற்பு மான்யம் ரூ 3 ஆயிரம் வழங்கப் படும்' என்றார். வேளாண் உதவி அலுவலர்கள் இமாம் ஜபார், ஜோதிராஜ்,அட்மா பணியாளர் தங்கபாண்டியன் பங்கேற்றனர்.

## பயிர் இன்சூரன்ஸ்: டிச.15க்குள் விண்ணப்பிக்கலாம்

திருப்புத்தூர்:திருப்புத்தூர் வட்டார விவசாயிகள் தங்கள் நெல் பயிரை தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் டிச.15 க்குள் காப்பீடு செய்யுமாறு வேளாண் உதவி இயக்குநர் சர்மிளா அறிவித்துள்ளார்.அவர் தெரிவித்துள்ளதாவது:பயிர்க்கடன் பெறும் அனைத்து சிறிய, பெரிய விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.149 கட்டணம் செலுத்தியும், கடன் பெறாத சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.134 காப்பீடுக் கட்டணம் செலுத்தவேண்டும்.

விவசாயிகள் பகுதியிலுள்ள தொ.வே.கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தலாம். வி.ஏ.ஓ. அடங்கல் சான்றை விண்ணப்பித்துடன் இணைத்து தொ.வே.கூ.வங்கியில் அளிக்க வேண்டும். பயிர் விதைத்து ஒரு மாதம் அல்லது டிச.15 இதில் எது முன்னதோ அதற்குள் கட்ட வேண்டும். பிர்க்கா அளவில் பாதிப்பு கணக்கிடப்பட்டு, நெல் பயிருக்கு மூன்று வருடம் சராசரி மகசூல் அடிப்படையில் இழப்பீடுத் தொகை வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு திருப்புத்தூர் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என தெரிவித்துள்ளார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே வெள்ளிக்கிழமை இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: தென் கிழக்கு வங்கக் கடல், குமரிக்கடல் பகுதிகளில் இரு வேறு காற்று மேலடுக்கு சுழற்சிகள் உருவாகின. இதன் காரணமாக, கடந்த சில நாள்களாக திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட ஒரு சில மாவட்டத்தில் மழை பெய்தது. கடந்த 24 மணி நேரத்தில், கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் 80 மி.மீ, கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடியில் 50 மி.மீ, நீலகிரி மாவட்டம் குன்னூரில் 40 மி.மீ, ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் 30 மி.மீ, நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் 20 மி.மீ மழை பதிவானது.தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்த வரை, பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலையைப் பொருத்தவரை அதிகபட்சமாக 95 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும் என்றார் அவர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைவு**

மேட்டூர் அணையின் தற்போதைய நீர் இருப்பு 3 வார கால பாசனத்திற்கு மட்டுமே போதுமானதாக இருப்பதால், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

பருவமழை குறைவால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்தது. காலை நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 2,740 கனஅடியாகவும், நீர்மட்டம் 63.30 அடியாகவும் உள்ளது. பாசனத்திற்காக

வினாடிக்கு 8,700 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. வரத்து மற்றும் திறக்கப்படும் நீரின் அளவு இதே நிலையில் நீடித்தால் 3 வார காலத்திற்கு மட்டுமே காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முடியும் என பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் நடவு செய்த பயிர்களை காப்பாற்றுவது எப்படி என்று தவித்து வருவதாக காவிரி டெல்டா விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

### அடுத்த வாரத்தில் வடகிழக்கு பருவமழை

தமிழகத்தில் அடுத்த வாரத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது:

வழக்கமாக அக்டோபர் 3-ஆவது வாரத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கும். நிகழாண்டில் அக். 20-இல் வட கிழக்குப் பருவ மழை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதற்கான அறிகுறிகள் தற்போது இல்லை. பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட சூறாவளியின் தாக்கத்தால், நிகழாண்டு சற்று தாமதமாகவே வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கும். அதாவது, கூடுதலாக 5 நாள்கள் வரை ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி இந்த வாரத்தின் இறுதிக்குள் பருவமழை தொடங்க அதிக வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே தென் கிழக்கு வங்கக் கடல், குமரிக்கடல் பகுதிகளில் இரு வேறு காற்று மேலடுக்கு சுழற்சிகள் உருவாகின. இதன் காரணமாக, கடந்த சில நாள்களாக திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட ஒரு சில மாவட்டத்தில் மழை பெய்தது.

கடந்த 24 மணி நேரத்தில், கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் 80 மி.மீ, கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடியில் 50 மி.மீ, நீலகிரி மாவட்டம் குன்னூரில் 40 மி.மீ, ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் 30 மி.மீ, நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் 20 மி.மீ மழை பதிவானது.

தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்த வரை, பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலையைப் பொருத்தவரை அதிகபட்சமாக 95 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும் என்றார் அவர்.

### கூட்டுறவு ஏல மையத்தில் 90 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் 90 சதவீத தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டது.

இந்த மையத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 6.08 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது.

இதில், இலை ரகம் 3.86 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 2.21 லட்சம் கிலோவும் அடங்கும்.

இந்த ஏலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று தேயிலை தூளைக் கொள்முதல் செய்தனர். ஏலத்தில் 90 சதவீத தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது.

### குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மீண்டும் படகு சவாரி துவக்கம்

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் வியாழக்கிழமை முதல் படகு சவாரி மீண்டும் துவங்கியுள்ளது.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் அரிய வகை மூலிகைச் செடிகள், நூற்றாண்டு பழைமை வாய்ந்த மரங்கள் உள்ளன. இதுமட்டுமல்லாமல் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் சிறுவர் பூங்கா, மினி படகு இல்லம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த ஆண்டு தொடக்கத்தில் பெய்த பலத்த மழையால் பூங்காவில் பல இடங்களில் மரங்கள் சாய்ந்தன. இதனால் மினி படகு ஏரியும் சேறும், சகதியுமாக மாறியது. இதையடுத்து, சிம்ஸ் பூங்காவில் படகு சவாரி ரத்து செய்யப்பட்டடு, ரூ.20 லட்சத்தில் படகு இல்லத்தைப் புனரமைக்கும் பணி துவங்கப்பட்டது. இந்நிலையில், புனரமைப்புப் பணிகள் முடிவடைந்தும்,

ஏரியில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் படகு சவாரி ரத்து செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், சமீபத்தில் பெய்த மழையால் மினி ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. தொடர்ந்து சிம்ஸ் பூங்காவில் படகு சவாரி வியாழக்கிழமை முதல் மீண்டும் தொடங்கப்பட்டது. இதனால், சிம்ஸ் பூங்காவுக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் உற்சாகத்துடன் படகு சவாரி செய்தனர்.

## கம்பளிப் புழுக்களை கட்டுப்படுத்தக் கோரிக்கை

சங்ககிரி வட்டத்துக்குள்பட்ட வேளாண் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களில் உள்ள கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்த, நடவடிக்கை எடுக்க வேளாண் துறையினருக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

மகுடஞ்சாவடி அருகே உள்ள ஏகாபுரம், தப்பகுட்டை, கப்பரையான் காடு, தாடிக்காரனூர், தெற்கு மேடு உள்ளிட்ட பகுதிகளில், நிலக்கடலை, மரவள்ளிக் கிழங்குகளை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த இரு வாரங்களுக்கு முன் அப்பகுதியில் கம்பளிப் புழுக்கள் அதிகளவில் பெருகி செடிகளை சேதப்படுத்தி வருகின்றன. கம்பளிப் புழுக்களால் விவசாயிகள் பயிர்களைக் கவனிக்க முடியாமலும், அறுவடை செய்ய முடியாமலும் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்தி, முழுமையாக அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

## கம்பளிப் புழுக்களை கட்டுப்படுத்தக் கோரிக்கை

சங்ககிரி வட்டத்துக்குள்பட்ட வேளாண் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களில் உள்ள கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்த, நடவடிக்கை எடுக்க வேளாண் துறையினருக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

மகுடஞ்சாவடி அருகே உள்ள ஏகாபுரம், தப்பகுட்டை, கப்பரையான் காடு, தாடிக்காரனூர், தெற்கு மேடு உள்ளிட்ட பகுதிகளில், நிலக்கடலை,

மரவள்ளிக் கிழங்குகளை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த இரு வாரங்களுக்கு முன் அப்பகுதியில் கம்பளிப் புழுக்கள் அதிகளவில் பெருகி செடிகளை சேதப்படுத்தி வருகின்றன. கம்பளிப் புழுக்களால் விவசாயிகள் பயிர்களைக் கவனிக்க முடியாமலும், அறுவடை செய்ய முடியாமலும் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்தி, முழுமையாக அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

### அக். 30-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியரகத்தில் அக். 30-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

இதில் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் கருத்துகளைத் தெரிவித்துப் பயன்பெறுமாறு ஆட்சியர் சு. பழனிசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தமிழ்நாடுஉதவி வேளாண்மை அலுவலர்கள் சங்க 18-ம் ஆண்டு விழா

தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கத்தின் 18 ஆம் ஆண்டு தொடக்க விழா பெரம்பலூரில் திங்கள்கிழமை கொண்டாடப்பட்டது.
பெரம்பலூர் புறநகர் பேருந்து நிலையம் அருகேயுள்ள வேளாண்மைத் துறை அலுவலகத்தில் நடைபெற்ற விழாவுக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் மணி முன்னிலை வகித்தார். விழாவில், அரசு அலுவலர் ஒன்றிய சங்க மாநில இணைச் செயலர் சக்ரபாணி, மாவட்டத் தலைவர் பாபு ஆகியோர் சிறப்புரையாற்றினர். உதவி வேளாண்மைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்டச் செயலர் பெரியசாமி, சங்கக் கொடியை ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில், மாவட்டப் பொருளாளர் வீரபாண்டியன், மாவட்ட இணைச் செயலர் மூர்த்தி, மாவட்ட துணைத் தலைவர் முருகேசன், மாவட்ட தணிக்கையாளர் இளையராஜா, மாவட்ட அமைப்புச் செயலர் சின்னதுரை, ஒன்றியச் செயலர்கள் வீரசிங்கம், பழனிமுத்து, நல்லுசாமி, வீராசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். சங்க நிர்வாகி பாத்திமா நன்றி கூறினார்.

## களியக்காவிளையில் பலத்த மழை

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது.

மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்து வந்த மழை இரு நாள்களாக குறைந்திருந்தது. இதனால் வெயிலின் தாக்கம் அதிகரித்திருந்தது. இந்நிலையில் வியாழக்கிழமை மாலையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு மிதமான மழை பெய்தது. சிறிது நேரத்துக்குப் பின்பு பலத்த மழை பெய்தது. இதனால் வெப்பத்தின் தாக்கம் குறைந்து குளிர்ச்சி நிலவியது.

படந்தாலுமூடு, கோழிவிளை உள்ளிட்ட பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. குழித்துறை, மார்த்தாண்டம் பகுதிகளில் மிதமான மழை பெய்தது.

## தேசிய மண்வள அட்டை தொழில்நுட்பப் பயிற்சி

நாடு முழுவதும் 2015-ஆம் ஆண்டு மண்வள ஆண்டாக கொண்டாடும் திட்டத்தை பிரதமர் மோடி அண்மையில் தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து, கடலூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ், 30 விவசாயிகளுக்கு தேசிய மண்வள அட்டை இயக்கம் குறித்த தொழில்நுட்ப பயிற்சி கடலூரில் 2 நாள்கள் நடைபெற்றது.

அண்மையில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு வேளாண் துணை இயக்குநர் க.இளங்கோ (மாநில திட்டம்) தலைமை வகித்து, மண்வள திட்டத்தின் முக்கியத்துவம், விவசாயிகளின் ஈடுபாடு, மகசூலுக்கு முக்கிய காரணமான மண்ணின் வளம் குறித்துப் பேசினார்.

கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் ரா.சீ.புருஷோத்தமன் தொழில்நுட்பங்கள் குறித்தும், பேராசிரியர் தி.கலைமணி நோய் எதிர்ப்பு மற்றும் விதை நேர்த்தி குறித்தும் பேசினர்.

வேளாண்மை உதவி இயக்குநர் பொ.ஜெயக்குமார், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், மண் ஆய்வு பரிந்துரை மற்றும் மண்வள கையேடு குறித்து எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர்கள் எப்.முகமதுநிஜாம், பி.சின்னகண்ணு, எஸ்.பூவராகவன், ஜி.பரிமேலழகன்,கே.ரவிசங்கர், பாலசுப்ரமணியன் ஆகியோர் முறையே மண் ஆய்வு தோன்றிய வரலாறு மற்றும் தேசிய மண் வள இயக்கம் பற்றிய கண்ணோட்டம், மண் ஆய்வின்

முக்கியத்துவம் மற்றும் மண் மாதிரி எடுக்கும் முறை, மண்ணில் உள்ள பிரச்னைகள், அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகள், பயிர் வளர்ச்சிக்கு பசுந்தாள் உரங்களின் பங்கு, மண்வளபாதுகாப்பில் உயிர்
உரங்களின் பங்கு குறித்துப் பேசினர். வேளாண் அலுவலர் கே.மாலினி நன்றி கூறினார்.

## புரட்டாசி மாதம் முடிந்ததை தொடர்ந்து மீன் விலை கிலோவுக்கு ரூ.30 முதல் ரூ.100 வரை அதிகரித்தது மேலும் விலை உயர வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தகவல்



சென்னை,
புரட்டாசி மாதம் முடிந்ததை தொடர்ந்து மீன்களின் விலை கிலோவுக்கு ரூ.30 முதல் ரூ.100 வரை அதிகரித்துள்ளதாகவும், மேலும் விலை உயர வாய்ப்பு இருப்பதாகவும் மீன் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

புரட்டாசி மாதம்

புரட்டாசி மாதம் கடந்த செப்டம்பர் மாதம் 18-ந் தேதி தொடங்கியது. புரட்டாசி மாதத்தில் பெரும்பாலானோர் அசைவ உணவுகளை தவிர்த்து

விடுவார்கள். எனவே அதுபோன்ற சமயத்தில் மீன், கோழி, ஆடு போன்ற அசைவ உணவுகளின் விலை சரிந்து காணப்படும்.அந்த வகையில், இந்த ஆண்டு புரட்டாசி மாதத்தில் மீன்களின் விலை பெருமளவில் குறைந்து காணப்பட்டது. இந்த நிலையில், கடந்த 17-ந் தேதியுடன் புரட்டாசி மாதம் நிறைவடைந்தது. இதைத்தொடர்ந்து மீன்களின் விலை கொஞ்சம் கொஞ்சமாக உயரத்தொடங்கியுள்ளது.இதுகுறித்து அகில இந்திய மீனவர் சங்க அமைப்பு செயலாளர் (தமிழ்நாடு) டி.பன்னீர் செல்வம் கூறியதாவது:-

ரூ.30 முதல் ரூ.100 வரை அதிகரிப்பு

புரட்டாசி மாதம் தொடங்கியதும் மீன்களின் விலை கட கடவென குறைந்தது. கிலோவுக்கு ரூ.50 முதல் ரூ.200 வரை அந்த சமயத்தில் குறைந்து காணப்பட்டது. தற்போது புரட்டாசி மாதம் முடிந்து, ஐப்பசி மாதம் தொடங்கியதும், மீண்டும் மீன்களின் விலை உயருகிறது.

பெரிய மீன் மற்றும் சிறிய மீன்களின் விலைகள் கிலோவுக்கு ரூ.30 முதல் ரூ.100 வரை அதிகரித்துள்ளது. மீன்வரத்து நன்றாக இருக்கிறது. சென்னை காசிமேடு துறைமுகத்தில் இருந்து நாளொன்றுக்கு சென்னை முழுவதும் 10 டன் முதல் 30 டன் வரை மீன்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

அதேபோல், தூத்துக்குடி, கன்னியாகுமரி, நாகப்பட்டினம், கேரளா, கோவா, மங்களூர் ஆகிய பகுதிகளில் இருந்து தினமும் 20 முதல் 40 டன் வரை மீன்கள் வருகிறது. இனி வரக்கூடிய நாட்களில் மங்களூர், கோவா, கேரளா ஆகிய பகுதிகளில் சீசன் குறையும். இதனால் மீன்வரத்து குறைந்து காணப்படும். எனவே மேலும் மீன்களின் விலை உயர வாய்ப்பு உள்ளது.

விலை நிலவரம்

சென்னையில் உள்ள மீன் மார்க்கெட்டுகளில் நேற்று விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:- வஞ்சிரம் (பெரியது) - ரூ.500(ரூ.400), வஞ்சிரம் (சிறியது) - ரூ.300(ரூ.250), சங்கரா (பெரியது) - ரூ.150(ரூ.90), சீலா - ரூ.230(ரூ.170), கிழங்கா - ரூ.240(ரூ.180), நண்டு - ரூ.180(ரூ.140), கடமான் -

ரூ.150(ரூ.120), அயிலா - ரூ.120(ரூ.60), சூர மீன் - ரூ.75(ரூ.50), மத்தி - ரூ.80(ரூ.40), கடல் இறால் - ரூ.350 முதல் ரூ.400 வரை(ரூ.300), நெத்திலி - ரூ.140(ரூ.80), பாறை மீன் - ரூ.230(ரூ.160), மடவ மீன் - ரூ.160(ரூ.120), சுறா - ரூ.240(ரூ.180).

இவ்வாறு அவர் கூறினார்.

(குறிப்பு: பழைய விலை அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது)

## அடுத்த மாதம் முதல், விவசாயிகளிடம் இருந்து பருப்பை நேரடி கொள்முதல் செய்ய மத்திய அரசு முடிவு



புதுடெல்லி,

அடுத்த மாதம் முதல், விவசாயிகளிடம் இருந்து பருப்பை மத்திய அரசு நேரடியாக கொள்முதல் செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>விண்ணை எட்டும் விலை</u>

உரிய காலத்தில் மழை பெய்யாமல்போனதாலும், பருவம் தப்பி பெய்த மழையாலும் நாட்டில் பருப்பு உற்பத்தி 2014–15 ஆண்டில் 20 லட்சம் டன் அளவு குறைந்து உள்ளது.

இதன் காரணமாக பருப்பு விலை, விண்ணை எட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. ஒரு கிலோ துவரம் பருப்பின் விலை ரூ.200–ஐ தாண்டி விட்டது. இதனால் ஏழை எளியோர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதுக்கல் பருப்பு பறிமுதல்

பருப்பு விலை உயர்வின் காரணமாக பல இடங்களில் வியாபாரிகள் இன்னும் அதிக விலை எதிர்பார்த்து பதுக்கினர். கடந்த 2 நாட்களில் 10 மாநிலங்களில் 35 ஆயிரம் டன் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பருப்பினை இறக்குமதி செய்து விலையை கட்டுக்குள் வைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது பற்றி மத்திய நிதி மந்திரி அருண் ஜெட்லி, நேற்று முன்தினம் குறிப்பிடுகையில், '' ஏற்கனவே 5 ஆயிரம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அவை மாநிலங்களுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளன. 3ஆயிரம் டன் இறக்குமதி நடந்து கொண்டிருக்கிறது'' என கூறினார்.

நேரடி கொள்முதல்

இந்த நிலையில் மத்திய விவசாயத்துறை செயலாளர் சிராஜ் உசேன், செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது:–

அடுத்த மாதம் முதல் விவசாயிகளிடம் இருந்து 'நபெட்' மற்றும் 'எஸ்.ஏ.எப்.சி'யின் மூலம் மத்திய அரசு நேரடியாக பருப்பு கொள்முதல் செய்யும்.

இதன்மூலம் 40 ஆயிரம் டன் பருப்பு கொள்முதல் செய்யப்படும். இந்த பருப்பு, விலையை நிலைப்படுத்துவதற்காக இருப்பு வைக்கப்படும். தேவைப்பட்டால் மத்திய அரசு பருப்பினை இறக்குமதி செய்யும்.

அடுத்த மாதம் துவரம்

பருப்பு, கொண்டைக்கடலை, உளுந்து உள்ளிட்ட பருப்பு வகைகள், அவற்றை பெருமளவு உற்பத்தி செய்கிற மாவட்டங்களில் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படும்.

மாநில கூட்டுறவு சங்கங்களிடம் இருந்து 'நபெட்' கொள்முதல் செய்யும். மாநில அரசுகளின் அமைப்புகளிடம் இருந்து 'எஸ்.ஏ.எப்.சி.' கொள்முதல் செய்யும். 'நபெட்' 30 ஆயிரம் டன்களும், 'எஸ்.ஏ.எப்.சி.' 10 ஆயிரம் டன்களும் கொள்முதல் செய்யும். இது அடுத்த மாதம் முதல் வாரத்தில் தொடங்கி விடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## “நீட்ஸ்” திட்டத்தில் தகுதியானவர்களுக்கு உடனடி மானியக்கடன்




கோவை,

கோவை மாவட்டத்தில் “நீட்ஸ்” திட்டத்தில் தகுதியானவர்களுக்கு உடனடி மானியக்கடன் வழங்கப்படுவதாக அதிகாரி கூறினார். முதல்தலைமுறை தொழில்முனைவோர் கோவை மாவட்டத்தில் புதிய தொழில் முனைவோர்களை உருவாக்கும் வகையில் நீட்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, மற்றும் ஐ.டி.ஐ படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்து, நிதி நிறுவனங்கள் மூலமாக மானிய கடன் வழங்கி புதிய உற்பத்தி, சேவை தொழில்களை தொடங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.

இந்த திட்டத்தில் ரூ.5 லட்சம் முதல் ரூ.1 கோடிவரை கடன் உதவி வழங்கப்படுகிறது. இதற்கு 25 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. வங்கிக்கடனுக்கு 3 சதவீத குறைந்த வட்டி மட்டுமே அளிக்கப்படுகிறது. மேலும் இந்த திட்டத்தின் கீழ் வருமான வரம்பு எதுவும் கிடையாது.

பெண்களுக்கு ஒதுக்கீடு

இந்த திட்டத்தில் கடன்பெற ஆதிராவிடர்களுக்கு 18 சதவீதமும், பழங்குடியினருக்கு 1 சதவீதமும், மாற்று திறனாளிகளுக்கு 3 சதவீதமும், பெண்களுக்கு 50 சதவீதமும் ஒதுக்கீடு உள்ளது. சேவை தொழில்கள், உற்பத்தி தொழில்கள், சிறப்பு தொழில்கள் தவிர ஏனைய தொழில்களுக்கும் இந்த கடன் உதவி வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் கடன்பெற 21 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். பொதுப்பிரிவினருக்கு அதிக பட்ச வயது 35 ஆகும். இதர சிறப்பு பிரிவினருக்கு (பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், மாற்று திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர், திருநங்கைகள்) அதிக பட்ச வயது 45 ஆகும். விண்ணப்பிக்கலாம்

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:– இந்த திட்டத்தின் கீழ் மாதந்தோறும் விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கு நேர்முக தேர்வு நடக்கிறது. அதில் தேர்வு செய்யப்படுகிறவர்களுக்கு உடனடியாக மானியக்கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடன் உதவியை பெற்று புதிய தொழில் தொடங்கும் அவர்களுக்கு 1 மாத கால மேலாண்மை பயிற்சி, உதவித்தொகையுடன் அளிக்கப்படுகிறது. ஆகவே இந்த திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். இந்த திட்டத்தின் விண்ணப்பம், உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் மாவட்ட தொழில் மையத்தின் வலை தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர்கூறினார்.

## கரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.479 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டு உள்ளது கலெக்டர் ஜெயந்தி பேட்டி



கரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.479 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டு உள்ளது என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

ஆய்வு

கரூர் மாவட்டத்தில் கூட்டுறவு துறை மூலம் கடன் பெற்று கரூர் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு உள்ள பல்வேறு விவசாய நிலங்களை கலெக்டர் ஜெயந்தி நேரில் சென்றுபார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா 2-ம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தும் வகையில் வேளாண் விரிவாக்க சேவைகளை வலுப்படுத்துதல் மற்றும் கட்டமைப்புகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்த உத்தரவிட்டு உள்ளார். அதன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கரூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் 2011-2012-ம் ஆண்டில் 20 ஆயிரத்து 770 பயனாளிகளுக்கு ரூ.92 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில் பயிர்க்கடன் வழங்கப்பட்டு உள்ளது. அதேபோன்று 2012-2013-ம் ஆண்டில் 22 ஆயிரத்து 965 பயனாளிகளுக்கு ரூ.112 கோடியே 60 லட்சமும், 2013-2014-ம் ஆண்டில் 23 ஆயிரத்து 919 பயனாளிகளுக்கு ரூ.132 கோடியே 21 லட்சமும், 2014-2015-ம் ஆண்டில் 23 ஆயிரத்து 420 பயனாளிகளுக்கு ரூ.141 கோடியே 73 லட்சமும் என கடந்த 4 ஆண்டுகளில் 91 ஆயிரத்து 74 பயனாளிகளுக்கு ரூ.479 கோடியே 44 லட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கரூர் மாவட்டத்தில் 84 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி விவசாயிகளின் உடனடி தேவைகளை அறிந்து வேளாண் இடுப்பொருட்களான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் விவசாயிகளின் தேவைக்கேற்ப அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது.

நகைக்கடன்கள்

விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு விவசாயப்பணிகள் தங்குதடையின்றி மேற்கொள்ள 84 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள், வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் ஆகியவற்றில்

விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் நகைக்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி முதலீட்டுக்கடன் முன்னேற்றத்திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 16 ஆயிரத்து 312 பயனாளிகளுக்கு ரூ.28 கோடியே 21 லட்சத்தில் வேளாண் உபகரணங்கள், கறவை மாடுகள் மற்றும் தொழில்முனைவோருக்கான கடன்கள் வழங்கப்பட்டு உள்ளன. மேலும் மாவட்டத்தில் 70 தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான மருந்து தெளிப்பான், உழவு எந்திரங்கள் போன்ற உபகரணங்கள் வாடகையில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறி னார்.

சிறந்த லாபம்

கூட்டுறவுத்துறையின் வேளாண் கடன் சங்கம் மூலம் கடன் பெற்று மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்து வரும் புன்செய் கடம்பக்குறிச்சியை சேர்ந்த சகுந்தலா கூறும்போது, கடந்த 40 ஆண்டுகாலமாக நாங்கள் விவசாய பணிகளைசெய்து வருகிறோம். இன்றைய காலகட்டத்தில் விலை ஏற்றத்தின் காரணமாக விவசாயப்பணிகளை எவ்வாறு மேற்கொள்வது என்ற மனக்குழப்பத்தில் இருந்த என்னை போன்ற பல விவசாய குடும்பங்களுக்குஏற்றம் காணும் விதமாகமுதல்-அமைச்சர் வட்டியில்லா பயிர்க்கடன் வழங்க உத்தரவிட்டு உள்ளார். அதன்படி சிறு விவசாயிகள் திட்டங்களை பயன்படுத்தி பணப்பயிர் எனகருதப்படும் மரவள்ளிக்கிழங்கை பயிரிட்டு 100 சதவீதம் மகசூல் பெற்று சிறந்த லாபம் பெற்று வருகிறோம் என்றார்.

## காய்கறி-பூஜைப்பொருட்கள் அமோக விற்பனை கடை வீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆயுதபூஜையை முன்னிட்டு காய்கறிகள் மற்றும் பூஜைப்பொருட்கள் விற்பனை அமோகமாக நடைபெற்றது. இதையொட்டி கடைவீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

ஆயுதபூஜை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று (புதன்கிழமை) ஆயுத பூஜை பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு தொழில் நிறுவனங்களில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபடுவது வழக்கம். இதற்காக பூஜை பொருட்களின் விற்பனை நேற்று மாவட்டம் முழுவதும் அமோகமாக இருந்தது. பூக்கள், மாலைகள், இலை, தேங்காய் உள்ளிட்ட பூஜை பொருட்கள் விற்பனை அதிக அளவில் இருந்தது. அதே போல மாவட்டம் முழுவதும் உள்ள உழவர் சந்தைகளில் காய்கறிகள் விற்பனை அமோகமாக இருந்தது. நேற்று காலை முதலே ஏராளமான பொதுமக்கள் வந்து காய்கறிகளை வாங்கி சென்றனர். இதே போல பொரி, இனிப்பு வகைகள் விற்பனையும் ஜோராக இருந்தது. கிருஷ்ணகிரி நகரில் ரவுண்டானா, சப்-ஜெயில் சாலை, சென்னை சாலை, பெங்களூரு சாலை என்று நகரின் முக்கிய பகுதிகளில் ஆங்காங்கே பூஜை பொருட்கள் விற்பனை நடைபெற்றது இதை பொதுமக்கள் வாங்கி சென்றார்கள்.

ஓசூர்

ஓசூரில் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு ஆண்டுதோறும் ஆயுதபூஜையை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்படுவது வழக்கம். அதே போல இந்த ஆண்டும் ஆயுத பூஜையை

முன்னிட்டு பூஜைகளை சிறப்பாக நடத்த ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

ஓசூரில் தாலுகா அலுவலகம் அருகில் உழவர் சந்தை அமைந்துள்ளது. இங்கு ஓசூர் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். ஆயுத பூஜையை முன்னிட்டு நேற்று ஓசூர் உழவர் சந்தையில் காய்கறிகள் மற்றும் பூஜைப்பொருட்கள் விற்பனை ஜோராக நடைபெற்றது.

அலைமோதிய மக்கள் கூட்டம் காலை 5 மணி முதலே மக்கள் கூட்டம் உழவர் சந்தையில் அலைமோதியது. அவர்கள் காய்கறிகளையும், பழங்கள், தேங்காய், பூ உள்ளிட்ட பூஜை பொருட்களையும் வாங்கி சென்றார்கள். ஓசூர் உழவர் சந்தையில் நேற்று மட்டும் 75 டன் காய்கறிகளும், 2 டன் பழங்களும், 200 கிலோ பூக்களும் விற்பனை ஆனது. நேற்று ஒரே நாளில் ரூ.16 லட்சத்து 87 ஆயிரத்து 966-க்கு காய்கறிகளும், ரூ.66 ஆயிரம் மதிப்பில் பழங்களும் மற்றும் ரூ.30 ஆயிரம் மதிப்பில் பூக்களும் விற்பனை ஆனது. ஒட்டு மொத்தமாக ரூ.17 லட்சத்து 85 ஆயிரத்திற்கு காய்கறிகள், பூக்கள், பழங்கள் விற்பனை ஆனது. நேற்று ஒரே நாளில் மட்டும் 11 ஆயிரம் நுகர்வோர்கள் ஓசூர் உழவர் சந்தைக்கு வந்து காய்கறிகள், பழங்களை வாங்கி சென்றார்கள். இதை முன்னிட்டு 268 விவசாயிகள் கடைகளை அமைத்திருந்தனர்.

இதேபோல கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணம், பர்கூர், ஊத்தங்கரை, மத்தூர், தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை, கெலமங்கலம் உள்ளிட்ட பகுதிகளிலும் ஆயுத பூஜையை முன்னிட்டு பூஜைப்பொருட்கள் விற்பனை அமோகமாக நடைபெற்றது.

## தமிழக காய்கறிகளில் நச்சுத்தன்மை இல்லை கேரளாவில் இருந்து வரும் ஏலக்காயில் 30 சதவீதம் கூடுதலாக உள்ளது



தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு அனுப்பப்படும் காய்கறிகளில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கும் கீழாக தான் நச்சுத்தன்மை உள்ளது. ஆனால் கேரளாவில் இருந்து வரும் ஏலக்காயில் 30 சதவீத நச்சுத்தன்மை கூடுதலாக உள்ளது என்று வேளாண்மை துறை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

பட்டயம் வழங்கும் விழா

மதுரை வாப்ஸ் நிறுவனம் சார்பில் உர விற்பனையாளர்களுக்கான இடுபொருள் பட்டய படிப்புக்கான சான்றிதழ்களை வழங்கும் விழாவில் கலந்து கொண்ட தமிழக அரசின் வேளாண் இயக்குனர் ராஜேந்திரன் பேசியதாவது:- இடுபொருள் விற்பனை தொடர்பான பட்டய படிப்பை இடுபொருள் விற்பனையாளர்கள் படிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு உரங்களை சரியன பரிந்துரையின்படி வழங்க முடியும். இடுபொருள் விற்பனையாளர்கள் வேளாண்மை துறைக்கும், விவசாயிகளுக்கும் ஒரு தொடர்பினை ஏற்படுத்தி வேளாண் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்து வருகின்றனர்.

வேளாண் தொடர்பான படிப்புகளை படித்த இடுபொருள் விற்பனையாளர்களிடம் தங்களுக்கான சரியான ஆலோசனை கிடைக்கும் என்றும் விவசாயிகள் நாடி வருகின்றனர். எனவே, இடுபொருள் விற்பனையாளர்கள் ஐதராபாத் மேனேஜ் நிறுவனம் வடிவமைத்த இடுபொருள் பட்டய படிப்பை வாப்ஸ் போன்ற நிறுவனங்களில் படித்து தங்களின் இடுபொருள் குறித்த அறிவை மேலும் மேம்படுத்தி விவசாயிகளுக்கு சேவை செய்திட வேண்டும்.

30 சதவீதம் கூடுதல்

மேலும், தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு அனுப்பும் காய்கறிகளில் நச்சுத்தன்மை இருப்பதாக கேரள அரசு கூறியிருந்தது. ஆனால், சோதனை செய்து பார்த்ததில் நமது காய்கறிகளில் அவ்வாறு எந்த நச்சுத்தன்மையும் இல்லை என்பதுடன் அனுமதிக்கப்பட்ட அளவை விட குறைவாக தான் நச்சுத்தன்மை இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால், கேரளாவில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காயில் அனுமதிக்கப்பட்ட அளவை விட 30 சதவிகிதம் கூடுதலாக நச்சுத்தன்மை இருப்பதாக தெரியவந்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய இடுபொருள் விற்பனையாளர்கள், வாப்ஸ் நிறுவனம் அளித்த படிப்பு தங்களின் உர அறிவை மேம்படுத்தி உள்ளது என்றும், மண், உரம், பூச்சி மருந்து பற்றிய விவரங்களுடன் இடுபொருள் பற்றிய சட்ட திட்டங்களையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது என்றும் தெரிவித்தனர். விழாவில் செம்பட்டி ஆர்.வி.எஸ் பத்மாவதி தோட்டக்கலை கல்லூரி முதல்வர் குமார், மதுரை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் பொறுப்பு ரவிச்சந்திரன் ஆகியோர் பேசினர். வாப்ஸ் செயலாளர் அருள் வரவேற்றார். மைய ஒருங்கிணைப்பாளர் பெரியசாமி நன்றி கூறினார்.

## கள்ளந்திரி பகுதியில் பயிர்களில் நோய் தாக்குதல்



மதுரையை அடுத்த அழகர்கோவில் சாலையில் உள்ள கள்ளந்திரி, தொப்புலாம்பட்டி, கீழகள்ளந்திரி, அப்பன் திருப்பதி, லெட்சுமிபுரம், சிட்டம்பட்டி, 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளைச்சல் நிலங்கள் உள்ளன. தற்போது பெரியார் வைகை தண்ணீரை நம்பி விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர்.

இதுபற்றி விவசாயிகள் கேத்தாம்பட்டியை சேர்ந்த மதுரைசாமி கூறியதாவது;- தண்ணீர் திறந்து மூன்று மாதமாகிவிட்டது. 2 மாதங்களாக பயிர் விளைச்சல் நன்றாக இருந்தன. தற்போது செந்தளை, இலை சுருட்டு புழு, புகையான் நோய்கள் தாங்கி சேதமடைந்துள்ளன. ஆண்டுதோறும் விவசாய அதிகாரிகள், ஒவ்வொரு வாரமும் ஆலோசனை கூறி வருவார்கள். ஆனால் இந்த ஆண்டு பயிர் பாதுகாப்பு பற்றி எந்த ஆலோசனைகளும் வழங்கப்படவில்லை. அதிகாரிகள் ஆய்வு செய்து மானியத்தில் மருந்து வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## ஆயுதபூஜையை முன்னிட்டு பூஜைப்பொருட்கள்? பூசணிக்காய் விற்பனை மும்முரம்

 

நாமக்கல்லில் நேற்று ஆயுத பூஜையை முன்னிட்டு பூஜைப் பொருட்கள் மற்றும் பூசணிக்காய் விற்பனை மும்முரமாக நடைபெற்றது.

ஆயுதபூஜை

ஆயுதபூஜை பண்டிகை இன்று (புதன்கிழமை) கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி வீடுகள், வர்த்தக நிறுவனங்கள், லாரி பட்டறைகளை சுத்தம் செய்யும் பணி நேற்று முழுவீச்சில் நடைபெற்றது.

மேலும் பூஜையில் இடம் பெறும் பொரி, கடலை, வெல்லம் போன்ற பொருட்கள் விற்பனை மும்முரமாக இருந்தது. இதற்காக சாலை ஓரங்களில் ஆங்காங்கே தற்காலிக கடைகள் போடப்பட்டு இருப்பதை காண முடிந்தது. இந்த கடைகளில் பொதுமக்கள் கூட்டம் அலைமோதியது. நாமக்கல் நகரை பொறுத்த வரையில் மெயின்ரோடு, திருச்சி ரோடு, சேலம் ரோடு பகுதிகளில் அதிக அளவில் தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டு இருந்தன.

பூசணிக்காய் விற்பனை

இதேபோல் பூஜைகளை முடித்து கொண்டு திருஷ்டி கழிப்பதற்காக பூசணிக்காய் உடைப்பதும் வழக்கம். எனவே பூசணிக்காயும் அதிக அளவில் சாலை ஓரங்களில் விற்பனைக்காக குவிக்கப்பட்டு இருந்தன. இவற்றை துறையூர், கும்பகோணம் பகுதிகளில் இருந்து வாங்கி வந்து வியாபாரிகள் விற்பனைக்கு வைத்து இருந்தனர். இவை அவற்றின் தரத்தை பொறுத்து ரூ.30 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டன. இவற்றையும் பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்வதை பார்க்க முடிந்தது. இந்த பூசணிக்காய்களை போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையில் உடைக்க வேண்டாம் என போலீசார் வேண்டுகோள் விடுத்து உள்ளனர்.
பூக்கள் விலை ‘கிடுகிடு’ உயர்வு

நாமக்கல் நகரில் லாரி பட்டறைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் ஆயுத பூஜை வெகு விமரிசையாக கொண்டாடப்படும். எனவே நேற்று பூக்கள் விற்பனை சூடுபிடித்தது. அதன் விலையும் ‘கிடுகிடு’ என உயர்ந்தது. பெரிய வியாபாரிகள் ஒன்று சேர்ந்து திருமண மண்டபத்தை வாடகை எடுத்து சேலம், ராயக்கோட்டை பகுதிகளில் இருந்து பூக்களை வாங்கி வந்து, மாலைகளாக கட்டி, விற்பனை செய்தனர். இது குறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:-

ஆயுத பூஜையை முன்னிட்டு பூக்கள் விலை ஏறத்தாழ 2 மடங்கு உயர்ந்து உள்ளது. சாதாரண நாட்களில் கிலோ ரூ.100-க்கு விற்பனை செய்யப்படும் சம்மங்கி பூக்கள் தற்போது ரூ.250-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல் சாதாரண நாட்களில் கிலோ ரூ.100-க்கு விற்பனை செய்யப்படும் செவ்வந்தி பூக்கள் தற்போது ரூ.300-க்கும், கிலோ ரூ.200 விற்பனை செய்யப்பட்டு வந்த மல்லிலை தற்போது கிலோ ரூ.300-க்கும் , கிலோ ரூ.50-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கேந்தி பூக்கள் தற்போது கிலோ ரூ.150-க்கும், ஒரு கட்டு ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கோழிக்கொண்டை பூக்கள் தற்போது ஒரு கட்டு ரூ.30-க்கு விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

## தொடர் விடுமுறை காரணமாக ஊட்டியில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்



ஊட்டி

ஆயூத பூஜை, விஜய தசமி பண்டிகையையொட்டி தொடர் விடுமுறை விடப்பட்டுள்ளதால் ஊட்டியில் சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர்.

<u>சுற்றுலா பயணிகள்</u>

நீலகிரி மாவட்டம் மலை மாவட்டமாக உள்ளதால் சுற்றுலா தலங்கள் அதிகளவு உள்ளன. மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களை கண்டுகளிப்பதற்காக வெளிமாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் அதிகளவு வருகிறார்கள்.

நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் ஊட்டி தாவரவியல் பூங்கா, படகு இல்லம், ரோஜா பூங்கா, தொட்டபெட்டா, பைக்காரா படகு இல்லம், பைக்காரா நீர்வீழ்ச்சி, குன்னூர் சிம்ஸ் பூங்கா, டால்பின்நோஸ், லாம்ஸ்ராக் உள்பட பல்வேறு இயற்கை காட்சி நிறைந்த இடங்களையும் கண்டு ரசித்து செல்கிறார்கள்.

<u>விடுமுறை</u>

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஆயுதபூஜையும், நேற்று விஜயதசமி பண்டிகையும் நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதையொட்டி தொடர் விடுமுறை விடப்பட்டுள்ளதால் ஊட்டிக்கு சுற்றுலா பயணிகள் குவிந்தனர். ஊட்டியில் நேற்று மழை இல்லாமல் வெயில் அடித்ததால் சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் பல்வேறு இடங்களில் கண்டு ரசித்தனர். படகு இல்லத்தில் ஏராளமான சுற்றுலா பயணிகள் படகுகளில் சவாரி செய்து மகிழ்ந்தனர்.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நேற்று முன்தினம் 8 ஆயிரத்து 71 சுற்றுலா பயணிகளும், நேற்று 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளும் வந்து இருந்தனர். இதேபோல் குன்னூர் சிம்ஸ் பூங்கா, டால்பின் நோஸ், லேம்ஸ் ராக், கோடநாடு காட்சி முனை உள்ளிட்ட இடங்களில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

<u>பஸ்களில் கூட்டம்</u>

விடுமுறையை முன்னிட்டு ஊட்டியில் கடந்த 3 நாட்களில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் குவிந்தனர். இதனால் தங்கும் விடுதிகள், ஓட்டல்கள் நிறைந்து காணப்பட்டன. இதனிடையே விடுமுறை முடிந்து நேற்று மாலை பெரும்பாலானவர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு சென்றனர். இதனால் ஊட்டி மத்திய பஸ் நிலையத்தில் பயணிகளின் கூட்டம் அதிகரித்து காணப் பட்டது.

சுற்றுலா பயணிகள் கூட்டத்தால் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் ‘களை’ கட்டி காணப்பட்டது. மேலும் ஊட்டி–குன்னூர் சாலை, ஊட்டி–கூடலூர் சாலை, சேரிங்கிராஸ், எட்டின்ஸ்சாலை உள்ளிட்ட சாலைகளில் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. போக்குவரத்தை போலீசார் ஒழுங்குபடுத்தினார்கள்.

## கரும்புகள் விற்பனையாகாமல் தேக்கம் வியாபாரிகள் கவலை




கூடலூர்

கூடலூரில் கரும்புகள் விற்பனை ஆகாமல் தேக்கம் அடைந்ததால் வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

கரும்புகள்

நீலகிரி மாவட்டத்தில் ஆயுத பூஜை, விஜயதசமி விழாவுக்காக சேலம், மேட்டூர், சங்ககிரி உள்ளிட்ட பகுதியில் இருந்து ஏராளமான லாரிகளில் கரும்புகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. கூடலூர் பகுதியிலும் விற்பனைக்காக வியாபாரிகள் கரும்புகளை கொண்டு வந்தனர்.

கூடலூரில் ஒரு ஜோடி கரும்பு ரூ.60–க்கு விற்கப்பட்டது. ஆனால் கரும்பு விலை உயர்வால் எதிர்பார்த்த அளவுக்கு விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தன. இதனால் வியாபாரிகள் கவலை அடைந்தனர்.

நஷ்டம்

இது குறித்து கரும்பு வியாபாரிகள் கூறியதாவது:–

ஊட்டியை போன்று கூடலூரில் அதிக விலைக்கு கரும்பு விற்கப்படுவது இல்லை. 1 ஜோடி கரும்பு ரூ.60–க்கு விற்று வருகிறோம். கடந்த ஆண்டை காட்டிலும் தற்போது கூடுதலாக கரும்புகள் லாரிகளில் கொண்டு வரப்பட்டு உள்ளது.

ஆனால் கடந்த ஆண்டை காட்டிலும் கரும்பு விற்பனை பெரும் அளவில் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தேக்கம் அடைந்த கரும்புகளை என்ன செய்வது என்று தெரியவில்லை. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## மண் வளத்தை பாதுகாக்க இளம் விஞ்ஞானிகள் எளிய வழிமுறைகளை கண்டு பிடிக்க வேண்டும் மாவட்ட வன அதிகாரி பேச்சு



ஊட்டி

இளம் விஞ்ஞானிகள் ஆய்வுகள் மேற்கொண்டு மண் வளத்தை பாதுகாக்க எளிமையான வழிமுறைகளை கண்டு பிடிக்க வேண்டும் என்று மாவட்ட வன அதிகாரி பத்ரசாமி கூறினார்.

61–வது ஆண்டு விழா

ஊட்டி அருகே உள்ள மத்திய மண் மற்றும் நீர் வள ஆராய்ச்சி மையத்தின் 61–வது ஆண்டு விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு மைய தலைவர் கோலா தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக ஊட்டியில் 1954–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20–ந்தேதி மண் பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

மையம் என்ற பெயரில் இந்த மையம் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் கடந்த 1967–ம் ஆண்டு மத்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் கீழ் இந்த மையம் கொண்டு வரப்பட்டது. கடந்த 1974–ம் ஆண்டு இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மையங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு மத்திய மண் மற்றும் நீர் வள ஆராய்ச்சி மையமாக இயங்கி வருகிறது.

<u>புல்வெளி</u>

நீலகிரி மாவட்டத்தில் இந்த மையம் மேற்கொண்ட ஆராய்ச்சி மூலம் கற்பூர மரங்களால் நீர் வளம் குறைவது கண்டறியப்பட்டது. சீகை மரங்களால் புல்வெளிகள் அழிந்து வருவதும் கண்டறியப்பட்டது. தற்போது படிப்படியாக சோலை மரங்கள், புல்வெளிகளை மீண்டும் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மையத்தின் மூலம் நீர்பிடிப்பு மேலாண்மை திட்டங்கள் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது குப்பைகள் அதிகரித்து வருவதால் மண்வளம் பெரிய அளவில் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாகனங்களில் பின்பகுதியில் குப்பை தொட்டிகள் அமைக்கப்பட்டு, அதில் சேகரமாகும் குப்பைகள் ஒரே இடத்தில் கொட்டப்பட்டு வருகின்றன. இதுபோன்ற திட்டத்தை நமது நாட்டில் படிப்படியாக அமல்படுத்த வேண்டும்.

<u>பயிற்சி</u>

இந்த மையத்தின் மூலம் நீர்வளம், மண்வளம் ஆகியவற்றை பாதுகாப்பது குறித்து வனத்துறை அதிகாரிகள், நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் என ஆயிரத்து 500–க்கும் மேற்பட்டோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். விழாவில் கலந்து கொண்ட மாவட்ட வன அதிகாரி பத்ரசாமி பேசும் போது கூறியதாவது:–

இந்த பயிற்சி மையம் சார்பில் வனத்துறையினருக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள் மூலம் வனப்பகுதிகளில் மண் அரிப்பை தடுத்தல், மண் வளத்தை பாதுகாத்தல், சணல் வலை மூலம் விவசாய நிலங்களில் மண் அரிப்பை தடுத்தல், புல்வளர்ப்பு உள்ளிட்ட திட்டங்களால் வனங்கள் மற்றும் வனத்தை ஒட்டியுள்ள ஓடைகள் பாதுகாக்கப்பட்ட உள்ளது.

<u>இளம் விஞ்ஞானிகள்</u>

நீலகிரியில் உள்ள மண் வளம் மற்றும் தன்மை குறித்து உரிய தகவல்கள் அளிக்கப்படுவதால் விவசாயம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இளம் விஞ்ஞானிகள் ஆய்வுகள் மேற்கொண்டு மண் வளத்தை பாதுகாக்க எளிமையான வழிமுறைகளை கண்டு பிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் மூத்த விஞ்ஞானிகள் டாக்டர் மணிவண்ணன், கஸ்தூரி, கண்ணன், காஸ்மிக் எக்ஸ்ரே விஞ்ஞானி அப்துல், கோதுமை ஆராய்ச்சி மைய தலைவர் சிவசாமி, உருளைக்கிழங்கு ஆராய்ச்சி மைய தலைவர் வெங்கடாசலம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தொட்டபெட்டா மலைப்பகுதியில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி பூக்கள்



ஊட்டி

ஊட்டி தொட்டபெட்டா மலைப்பகுதியில் தற்போது அரிய வகை குறிஞ்சி பூக்கள் பூத்து குலுங்குகின்றன. இதனை இங்கு வரும் சுற்றுலா பயணிகள் பார்வையிட்டு செல்கின்றனர்.

<u>குறிஞ்சி மலர்கள்</u>

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி பூக்கள் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் காணப்படுகின்றன. குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி, மஞ்சூர், எப்பநாடு, கிண்ணக்கொரை உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு காணப்படுகின்றன.

குறிஞ்சி பூவின் சிறப்பை விளக்கும் வகையில் தபால்தலையும் வெளியிடப்பட்டு உள்ளது. குறிஞ்சி மலர்களில் சுமார் 140–க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளதாக கூறப்படுகிறது. இதில் ஆண்டு தோறும் பூக்கும் குறிஞ்சி மலர்களும் அடங்கும். ஒருசில குறிஞ்சி மலர்கள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், அரிய வகை குறிஞ்சி மலர்கள் 12 ஆண்டுகள் மற்றும் 16 முதல் 18 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் பூக்கின்றன. இந்த வகை குறிஞ்சி மலர்கள் தற்போது மிக குறைந்த எண்ணிக்கையில் தான் காணப்படுகிறது.

<u>தொட்டபெட்டா</u>

மிக அரிய வகையான 16 முதல் 18 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர்கள் தொட்டபெட்டா மலைப்பகுதியில் பூத்து உள்ளன. இதனை இங்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து வியந்து செல்கின்றனர். இது குறித்து மாவட்ட வன அதிகாரி பத்ரசாமி கூறியதாவது:–

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் 140–க்கும் மேற்பட்ட குறிஞ்சி மலர் வகைகள் காணப்படுகின்றன. இதில் நீலகிரி மாவட்டத்தில் தான் குறிஞ்சி செடிகள் அதிகளவு வளர்கின்றன.

<u>பாதுகாக்க நடவடிக்கை</u>

தற்போது ‘ஸ்ட்ரோபிலாந்தஸ் ஜிங்கிரைனஸ்‘ வகை குறிஞ்சி மலர்கள் பூத்து உள்ளன. இது 16 முதல் 18 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்க கூடிய அரிய வகை குறிஞ்சி மலராகும். இதுபோன்ற குறிஞ்சி மலர்கள் ஆரம்ப காலத்தில் நீலகிரியில் அதிகளவு காணப்பட்டன. ஆனால் பார்த்தீனியம், லாண்டனா போன்ற வெளிநாட்டு களைச்செடிகளால் இதுபோன்ற அரிய வகை செடிகள் குறைந்து வருகின்றன. எனவே மாவட்ட வனத்துறையினர் சார்பில் அரியவகை குறிஞ்சி மலர் செடிகளை பாதுகாக்க திட்டமிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

குறிஞ்சி மலரில் இருந்து எடுக்கப்படும் தேன் மருத்துவ குணம் கொண்டதாக உள்ளது. இதனை நீலகிரியில் உள்ள ஆதிவாசி மக்கள் தங்களது பாரம்பரிய மருத்துவத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊட்டி கால்நடை பண்ணையில் மாடுகளுக்கு நோய்கள் பரவாமல் தடுக்கும் பணி தீவிரம்



ஊட்டி

ஊட்டி அருகே தீட்டுக்கல் பகுதியில் உள்ள கால்நடை பண்ணைகளில் உள்ள மாடுகளுக்கு தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

<u>கால்நடை பண்ணை</u>

ஊட்டி அருகே தீட்டுக்கல் பகுதியில் கால்நடை பண்ணை உள்ளது. இந்த பண்ணையில் உயர் ரக மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த மாடுகளில் இருந்து எடுக்கப்படும் விந்துகள் தமிழகம் முழுவதும் உள்ள கால்நடை ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இங்குள்ள மாடுகள் மிகவும் பாதுகாப்பான முறையில் வளர்க்கப்பட்டு வருகிறது. பண்ணைகளுக்கு தேவையான புற்கள், புண்ணாக்கு

உள்ளிட்ட உணவு பொருட்கள் உள்ளிட்டவை வெளி மாவட்டங்கள், அண்டை மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படுகிறது.

<u>பொடி தூவும் பணி தீவிரம்</u>

வாகனங்கள் மூலம் இந்த பொருட்கள் கொண்டு வரப்படும் போது பண்ணையில் மாடுகளுக்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. எனவே இதை கருத்தில் கொண்டு மாடுகளுக்கு நோய் பரவாமல் தடுக்க அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இதன்படி கால்நடை பண்ணைக்குள் வரும் வாகனங்களில் தீவிர சோதனை மேற்கொள்ளப்படுகிறது. பின்னர் அங்கு குளம் போல் தேக்கி வைக்கப்பட்டு உள்ள தண்ணீர் வழியாக வாகனம் செல்லும் போது டயர்களில் உள்ள கழிவுகள் அகற்றப்படுகிறது. மேலும் பிளிச்சிங் பவுடரும் தூவப்படுகிறது. இதன் மூலம் வாகனங்களில் ஏதாவது தொற்று கிருமிகள் இருந்தால் அவைகள் அழிக்கப்பட்டு விடும் என்றும், நோய் பரவாமல் தடுக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ராமேசுவரம் கடல்பகுதியில் மீன்பிடி படகுகளை நிறுத்த வசதியாக பெரிய துறைமுகம் அமைக்க மீனவர்கள் கோரிக்கை



ராமேசுவரம் கடல்பகுதியில் மீன்பிடி படகுகளை நிறுத்த வசதியாக பெரிய துறைமுகம் அமைக்க மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆழம் குறைவு

தமிழகத்திலேயே அதிக மீன்பிடி படகுகள் கொண்ட பகுதி, ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் . ராமேசுவரத்தில் மட்டும் 850-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளும், 500-க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகளும் மீன்பிடி தொழிலை நம்பி உள்ளன. ஆனால் இந்த மீன்பிடிபடகுகளை பாதுகாப்பாக நிறுத்த பெரிய துறைமுகம் இல்லாமல் உள்ளது. தற்போது பயன்பாட்டில் இருந்து வரும் துறைமுகம் கடந்த 1972-ம் ஆண்டு கட்டப்பட்டது. அப்போது ராமேசுவரத்தில் 32 விசைப்படகுகள் மட்டுமே இருந்தன.

ஆனால் தற்போது இங்கு 850-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் உள்ளன. தற்போது துறைமுக கடல் பகுதியில் ஆழம் குறைவாக உள்ளதால் மீன்பிடி படகுகளை துறைமுகத்தில் நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. சில நேரங்களில் படகுகள் தரை தட்டி நின்று சேதமாகின்றன. இதன்காரணமாக துறைமுகத்தில் இருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் படகுகளை நங்கூரமிட்டு படகுகளை மீனவர்கள் நிறுத்துகின்றனர். எனவே ராமேசுவரம் துறைமுக கடல் பகுதியை ஆழப்படுத்தி பெரிய துறைமுகம் அமைக்கவேண்டும் என்று மீனவர்கள் மத்திய,மாநில அரசுகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து விசைப்படகு மீனவர் சங்க தலைவர்கள் தேவதாஸ், எமரிட் ஆகியோர் கூறியதாவது:-

பயன் பாட்டில் உள்ள ராமேசுவரம் துறைமுகம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு ஆழப்படுத்தப்பட்டது. அதன்பின்னர் துறைமுக கடல் பகுதி இன்று வரை ஆழப்படுத்தப்படவில்லை. இதனால் துறைமுக பகுதியை மீனவர்கள் படகுகளை நிறுத்த பயன் படுத்த முடியாத நிலை உள்ளது. ஒரு சில சிறிய படகுகள் மட்டும் தான் துறைமுக பகுதியில் நிறுத்தப்பட்டு வருகின்றன. ஆண்டிற்கு பல ஆயிரம் கோடி ரூபாய் அந்நிய

செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் ராமேசுவரம் பகுதியில் மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்த பெரிய துறைமுகம் அமைக்கவேண்டும். துறைமுக கடல் பகுதியை ஆழப்படுத்த வேண்டும்.

நடவடிக்கை

இதுகுறித்து பலமுறை கோரிக்கைவிடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒருபுறம் இலங்கை கடற்படையினரால் மீன்பிடிக்கச்செல்ல முடியாமல் மீனவர்கள் கஷ்டப்பட்டு வருகிறோம். எனவே ராமேசுவரத்தில் உள்ள அனைத்து மீனவர்களின் நலன்கருதி பெரியதுறைமுகம் அமைக்க மத்திய,மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

**அங்காடி பருப்பு**

பருப்பு விலை நாளுக்கு நாள் ஏறி வருகிறது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கிலோ ரூ.250 என்கிற புதிய உச்சத்தை தொட்டிருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன் துவரம் பருப்பின் விலை கிலோவுக்கு ரூ.120 ஆக இருந்தது. இப்போது இரண்டு மடங்கை தாண்டி விட்டது. கிலோ 100 ரூபாய்க்கு விற்ற உளுந்தம்பருப்பின் விலை இப்போது 170 ரூபாய். வரிசையாக பண்டிகை நாட்கள் வருகின்றன. இவ்வேளையில் பருப்பின் விலை அதிகரித்திருப்பது மக்களை மிகவும் பாதித்துள்ளது. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்பதை போல தமிழக அரசு இப்போது திடுமென விழித்துக்கொண்டு மத்திய அரசிடம் இருந்து துவரம் பருப்பை ஒதுக்கீட்டில் பெற்று அங்காடிகளில் விற்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. வெளிநாட்டில் இருந்து 5 ஆயிரம் டன் துவரையை மத்திய அரசு இறக்குமதி செய்திருக்கிறது. இதில் 500 டன்னை தமிழ்நாட்டுக்கு தரக்கூறி ஒதுக்கீட்டை பெற்றிருக்கிறது அரசு. தமிழ்நாடு நுகர்பொருள்

வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம் வரும் 1ம் தேதி முதல் கிலோ ரூ.110க்கு விற்பனை செய்ய அரசு திட்டமிட்டிருக்கிறது. இதனால் வெளிச்சந்தையில் பருப்பின் விலை குறையும் என அரசு நம்புகிறது.

ஆனால் அரசின் இந்த நடவடிக்கை வெறும் கண்துடைப்பு, வெற்று ஜாலம் என வணிகர்கள் தெரிவிக்கின்றனர். அரவையில் ஏற்படும் கழிவு போக சுமார் 425 டன் அளவுக்கு மட்டுமே பருப்பு கிடைக்கும். இது 9 நாளுக்குத்தான் பயன்படும் என்று வியாபாரிகள் தெளிவுறக் கூறியுள்ளனர். பருப்பு விலை உயர்வால் மக்களிடம் ஏற்பட்டுள்ள அதிருப்தியை தற்காலிகமாக நிவர்த்தி செய்யும் அளவிலேயே அரசின் இந்த அறிவிப்பு உள்ளது. வடமாநிலங்களில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக போதிய அளவு பருப்பு விளைச்சல் செய்ய முடியவில்லை. இதுவே விலை ஏற்றதுக்கு காரணம் என கூறப்படுகிறது. பெரிய அளவில் பதுக்கல் நடந்ததும் விலை உயர்வுக்கு வழி வகுத்திருக்கிறது. விளைச்சல் காலங்களில் உரிய வகையில் இருப்பு வைத்துக்கொள்ளாதது, உணவு பதுக்கல்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்காதது என எப்போதும் போல மெத்தனப்போக்கில் அரசு இருப்பதும் விலை உயர்வுக்கு முக்கிய காரணம். உரிய திட்டமிடல் ஏதுமில்லாமல், கடைசி நேரத்தில் மக்களின் தேவையை பூர்த்தி செய்யாத அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசின் இத் திட்டத்தால் எந்த பலனும் ஏற்படப்போவதில்லை.

**முட்டை விலை 325 காசாக உயர்வு**



நாமக்கல்: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நேற்று முட்டை விலையை உயர்த்தியுள்ளது. முட்டையின் பண்ணைகொள்முதல் விலையில் 7 காசுகள் உயர்த்தப்பட்டு, முட்டை விலை 325 காசாக நிர்ணயம் செய்துள்ளது. ஒரே வாரத்தில் 23 காசு வரை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.57க்கும், கறிக்கோழி ஒரு கிலோ ரூ.70க்கும் நிர்ணயம் செய்யப்பட்டது. புரட்டாசி முடிந்துள்ளதால் கறிக்கோழி விலையும் உயர்ந்துள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) ஐதராபாத்-301, விஜயவாடா- 300, மைசூர்- 335, பெங்களுரு-330, கொல்கத்தா- 331, டெல்லி- 315 காசுகள்.

**சர்வதேச சந்தையில் விலை குறைவால் இந்திய காபி ஏற்றுமதி 3,00,522 டன்களாக சரிவு**



புதுடெல்லி: நாட்டின் காபி ஏற்றுமதி கடந்த 2014-15 அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலான சந்தை ஆண்டில் 3,00,522 டன்களாக சரிவடைந்தது. இதற்கு முந்தைய சந்தை ஆண்டில் இந்த ஏற்றுமதி 3,03,250 டன்களாக இருந்தது என்று காபி வாரியம் தெரிவித்துள்ளது. காபி ஏற்றுமதி சரிவடைந்ததற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. குறிப்பாக, சர்வதேச சந்தையில் காபி விலை சரிவடைந்தது முக்கிய காரணமாகும்.

இதனால் இந்திய காபிக்கான தேவை சர்வதேச சந்தையில் குறைந்து விட்டது. இதுமட்டுமின்றி, பிரேசில், இந்தோனேஷியா, வியட்நாம்

போன்ற நாடுகளில் அமெரிக்க டாலருக்கு நிகரான கரன்சி மதிப்பு குறைந்ததும் ஒரு காரணமாக அமைந்து விட்டது. இருப்பினும், மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி ரூ.5,142 கோடியாக உள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் இது ரூ.4,920ஆக இருந்தது. ஒரு டன் காபி விலை முந்தைய ஆண்டில் ரூ.1,62,255ஆக இருந்தது கடந்த சந்தையாண்டில் 1,71,105ஆக உயர்ந்துள்ளது என காபி வாரிய புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

**முட்டை விலை சரிவு தினமும் ரூ 3 கோடி இழப்பு !**




நாமக்கல் : தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயிக்கும் விலையை காட்டிலும் குறைந்த விலைக்கு முட்டை கொள்முதல் செய்யப்படுவதால் தினமும் ₹3 கோடி இழப்பு ஏற்படுகிறது என்று பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாமக்கல் கோழிப்பண்ணைகளில் தினமும் 3.50 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. நாமக்கல்லில் 50 ஆயிரம் கோழிகள் வளர்க்கப்படும் சிறிய பண்ணைகளும் உண்டு.

2 லட்சம் கோழிகள் வளர்க்கப்படும் நவீன பண்ணைகளும் இருக்கிறது. இங்கு உற்பத்தியாகும் முட்டைகள் தமிழக அரசின் சத்துணவு திட்டத்துக்கு வாரம் 3 கோடி சப்ளை செய்யப்படுகிறது. தமிழ்நாடு, கேரளாவில் 60 சதவீதம், புதுச்சேரி, கர்நாடகாவில் சில மாவட்டங்களுக்கு நாமக்கல் முட்டை சப்ளை செய்யப்படுகிறது. கடந்த 3 மாதத்துக்கு மேலாக பண்ணையாளர்கள் பெரும் நஷ்டத்தை முட்டை விற்பனையில் சந்திக்கின்றனர். முட்டையின் உற்பத்தி செலவை

விட விற்பனை விலை ரூ1 வரை குறைவாக உள்ளதாக பண்ணையாளர்கள் வேதனைப்படுகின்றனர். இதன் மூலம் கோழிப்பண்ணை தொழிலில் பண்ணையாளர்களுக்கு தினமும் சுமார் ரூ3 கோடி இழப்பு ஏற்படுகிறது. இது குறித்து தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையார்கள் சம்மேளனத்தின் தலைவர் முத்துசாமி கூறுகையில், ‘‘1 லட்சம் முட்டை தினமும் விற்பனை செய்தால் ரூ1 லட்சம் இழப்பு ஏற்படுகிறது. இதே நிலை தொடர்ந்து 5 மாதம் நீடித்தால் பண்ணைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும். கோழி தீவனம் தயாரிக்க பயன்படுத்தப்படும் மக்காச்சோளத்தை மத்திய அரசு மானிய விலையில் பண்ணையாளர்களுக்கு கொடுக்கவேண்டும்,’’ என்றார். தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு (என்.இ.சி.சி) நிர்ணயம் செய்யும் விலைக்கே முட்டையை விற்பனை செய்ய வேண்டும். அனைத்து பண்ணையாளர்களும் முட்டையை ரொக்கத்துக்கு மட்டும் விற்பனை செய்ய வேண்டும் என்றாலும் அனைத்து பண்ணையாளர்களும் இதனை பின்பற்றுவதில்லை. இதற்கு தொழில் போட்டியே காரணம். இதனால் முட்டை விற்பனையில் சிறிய பண்ணையாளர்கள் பெரும் இழப்பை சந்திக்கின்றனர்.

**விவசாயிகளிடம் அடுத்த மாதத்தில் இருந்து பருப்பு நேரடி கொள்முதல்**



புதுடெல்லி: பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த விவசாயிகளிடம் இருந்து சந்தை விலையில் 30 ஆயிரம் டன் துவரம் பருப்பு, 10 ஆயிரம் டன் உளுத்தம் பருப்பு கொள்முதல் செய்ய மத்திய அரசு முடிவு

செய்திருந்தது. இந்த கொள்முதல் அடுத்த மாதத்தில் இருந்து தொடங்கும் என மத்திய அரசு கூறியுள்ளது.

இதுகுறித்து மத்திய வேளாண் துறை செயலர் சிராஜ் ஹூசைன் கூறியதாவது: பருப்பு விலையை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது தவிர, உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து இருப்பு வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இவை தேவைக்கேற்ப மாநிலங்களுக்கு சப்ளை செய்யப்படும். தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் (நாபெட்) மூலம் 30 ஆயிரம் டன் பருப்பும், சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு மூலம் மொத்தம் 10 ஆயிரம் டன் பருப்பு கொள்முதல் செய்யப்படும். நவம்பர் முதல் வாரத்தில் இருந்து கொள்முதல் நடவடிக்கைகள் துவங்கும். இவ்வாறு சிராஜ் ஹூசைன் கூறினார்.

தி இந்து

தமிழால் இணைவோம்

## வங்கக் கடலில் காற்று மேல் அடுக்கு சுழற்சி_: தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

வங்கக் கடலில் காற்று மேல் அடுக்கு சுழற்சி உருவாகி யிருப்பதால் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானி லை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் இலங்கை கடற்கரையை யொட்டி காற்று மேல் அடுக்கு சுழற்சி உருவாகியுள்ளது. இதனால் தமிழகத்தில் ஆங் காங்கே ஒரு சில இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்தமான் கடல் பகுதியிலும் காற்று மேல் அடுக்கு சுழற்சி உருவாகியுள்ளதால் அடுத்த 3 நாட்களுக்கு ஆங்காங்கே மழை பெய்யலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

வட கிழக்கு பருவமழை தமிழகத்தில் 25-ம் தேதிக்கு பிறகு தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இந்நிலையில் தமிழகத்தில் 27-ம் தேதிக்கு மேல் மழை அதிகரிக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே, தற்போது உருவாகியுள்ள காற்று மேல் அடுக்கு சுழற்சி வலுவடைந்து பருவமழை தொடங்குவதற்கு காரணமாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட கிழக்கு பருவமழை அக்டோபர் 20 முதல் 23-ம் தேதி வாக்கில் வழக்கமாக தொடங்கும். பிலிப்பைன்ஸில் உருவான சூறாவளி மற்றும் சில காரணங்களால் இந்த ஆண்டு பருவமழை தாமதமாக தொடங்குகிறது. தமிழகத்தில் கோவை மாவட்டம் மேட்டுப் பாளையத்தில் 8 செ.மீ., கன்னியா குமரி மாவட்டம் மயிலாடியில் 5 செ.மீ., நீலகிரி மாவட்டம் குன்னூரில் 4 செ.மீ., ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் 3 செ.மீ. மழை நேற்று முன் தினம் பதிவாகியுள்ளது.

## ஆந்திரா கட்டிய தடுப்பணைகளால்_ தமிழக எல்லையில் விவசாயம் பாதிப்பு: தென்பெண்ணை ஆறு மூலம் மாற்று திட்டம் வேண்டும்_- விவசாயிகள் வலியுறுத்தல்



ஆந்திரா வனப்பகுதியில் அம்மாநில அரசு கட்டிய தடுப்பணைகளால், தமிழக எல்லையோர பகுதியில் உள்ள விளை நிலங்கள் வறண்டு பாலைவனமாக காட்சியளிக்கிறது. தென்பெண்ணை ஆறு மூலம் மாற்றுத் திட்டம் செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆந்திரா மாநிலம் குப்பம் வனப்பகுதியில் இருந்து மழைக் காலங்களில் வரும் மழை நீர், தமிழக எல்லையான காளிக் கோயில் வழியாக ஓதிகுப்பம் ஏரிக்கு வரும். சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த ஏரியில் இருந்து சிந்தகம்பள்ளி, காரகுப்பம், பர்கூர், மத்தூர் வழியாக பெனு கொண்டபுரம் ஏரிக்கு செல்லும்.

இந்த ஏரி நிரம்பிய பின் உபரி நீர் கால்வாய் மூலம் ஊத்தங்கரை அருகே உள்ள பாம்பாறு அணைக்கு செல்லும். ஓதிகுப்பம் ஏரியில் இருந்து பாம்பாறு அணை வரை உள்ள தூரம் 40 கிலோ மீட்டர்.

இந்த தண்ணீர் மூலம் பர்கூர், மத்தூர் மற்றும் ஊத்தங்கரை ஒன்றியத்தில் மட்டும் 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பாசனம் பெறும். விவசாயம் மட்டுமின்றி குடிநீர் தட்டுபாடும் இல்லாமல் இருந்தது. இந்த நிகழ்வுகள் அனைத்தும் கடந்த 15 ஆண்டுகள் முன்பு வரை நடந்தது.

ஆனால், குப்பம் வனப்பகுதியில் ஆந்திரா அரசு தடுப்பணைகளைக் கட்டி தண்ணீர் வரத்தை முற்றிலும் தடுத்ததால் தமிழக பகுதிகள் வறண்டுவிட்டன. தடுப்பணைகளால் ஓதிகுப்பம் ஏரிக்கு தண்ணீர் வரத்து முற்றிலும் நின்றது.

மேலும் ஓதிகுப்பம் ஏரியில் இருந்து பாம்பாறு அணைக்குத் தண்ணீர் செல்லும் கால்வாய்கள் ஆக்கிரமிப்பு, நகர, கிராமப் பகுதியில் இருந்து கழிவுகள் கொட்டப்பட்டதாலும், கிரானைட் குவாரிகளால் ஆக்கிரமிப்பு, போதிய மழையின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தற்போது தண்ணீர்வரத்து முற்றிலும் முடங்கி கழிவு நீர் கால்வாயாகக் காட்சியளிக்கிறது.

நீர் வரத்து இல்லாததால் விவசாயிகள் ஆழ்துளை கிணறுகளை அமைத்தனர். அதுவும் சில ஆண்டுகளில் வற்றியது. இதனால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாக தென்பெண்ணையாற்று திட்டங்களை தமிழக அரசு நிறைவேற்றி

விவசாயத்தையும், தங்களது வாழ்வாதாரத்தையும் காக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து படேதலாவ் கால்வாய் திட்ட விவசாயப் பயனாளிகள் குழு ஒருங்கிணைப்பாளர் விஜயக்குமார் ‘தி இந்து’விடம் கூறியதாவது:

ஆந்திரா வனப்பகுதியில் கட்டப்பட்ட தடுப்பணைகளால் 3 ஒன்றியத்துக்கு உட்பட்ட விவசாயிகள் கடும் பாதிப்பு அடைந்து வருகின்றனர். இதனை போக்கும் வகையில் மார்கண்டேய நதியில் இருந்து தண்ணீர் கொண்டுவரும் படேதலாவ் ஏரி திட்டம் செயல்படுத்தப்பட்டது. அந்தத் திட்டமும் கர்நாடகா - ஆந்திரா மாநிலத்தில் கட்டப்பட்ட தடுப்பணைகளால் முடங்கியது.

தற்போது தென்பெண்ணை ஆறு செல்லும் எண்ணேகொல்புதூரில் இருந்து படேதலாவ் ஏரிக்கு தண்ணீர் கொண்டுவர வேண்டும். இதன் மூலம் முதல் கட்டமாக கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, பர்கூர் ஒன்றியங்களில் உள்ள 28 ஊராட்சிகளில் 1,09,344 விவசாயிகள், 40,225 ஏக்கர் விளை நிலங்கள் பயனடையும். 95 ஏரிகளுக்கு நீர் வரத்து பெருகும்.

அதனைத் தொடர்ந்து காட்டாகரம் ஏரியில் இருந்து பெணுகொண்டாபுரம் ஏரிக்கு தண்ணீர் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த ஏரியின் உபரி நீர் பாம்பாறு அணைக்கு செல்லும். இதேபோல் படேதலாவ் ஏரியில் இருந்து ஓதிகுப்பம் ஏரிக்கு குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுசெல்ல தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பாம்பாறு அணை நீர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் சௌந்தரராஜன் கூறும்போது,_ ’வறண்டு போன நிலங்களை காக்க, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நெடுங்கல் அணையில் இருந்து பெணுகொண்டாபுரம் வழியாக பாம்பாறு அணைக்கு பாதாள கால்வாய் அமைத்து தண்ணீர் கொண்டுசெல்ல தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக பாம்பாறு அணை விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்’ என்றார்.

விகடன்

**பருப்பு விலை நெருப்பாக சுட காரணம் என்ன?**

கன்னியாகுமரியில் தயார் செய்யப்படும் மெதுவடை முதல், டெல்லியில் தயார் செய்யப்படும் தால் வரை, பலவகையான பதார்த்தங்களிலும் பருப்புக்கு முக்கிய இடமுண்டு. கடந்த சில மாதங்களுக்கு முன்பு கிலோ 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த பருப்பு வகைகள், இன்றைக்கு 210 ரூபாய் வரை விலை உயர்ந்து, நாடு முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அன்றாடம் வீடு, ஹோட்டல்களில் பயன்படுத்தும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பின் விலை உச்சத்தில் இருந்து வருகிறது. இந்த விலை உயர்வுக்கான காரணங்கள் குறித்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் முன்னாள் பேராசிரியரும், சந்தை தொழில்நுட்ப வல்லுனருமான முனைவர் ரவீந்திரனிடம் கேட்டோம்.

"இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பருப்பு வகைகள் ஏதாவது ஒருவகையில் உணவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. ஆகையால், பருப்புக்கான தேவை இருந்து கொண்டே இருக்கிறது. இந்திய மக்களின் ஓர் ஆண்டு பயன்பாட்டுக்கு 220 லட்சம் டன் பருப்பு வகைகள் தேவை. ஆனால், நம் நாட்டில் 180 லட்சம் டன் அளவுக்கு மட்டும்தான் உற்பத்திச் செய்யப்படுகிறது. மீதம் ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை பருப்பு உற்பத்தியில், உத்தரபிரேதேசம், ராஜஸ்தான் போன்ற வடமாநிலங்கள்தான் முக்கிய அங்கம் வகிக்கின்றன. 99 சதவிகிதம் பருப்பு உற்பத்தி, மானாவாரி நிலங்களில்தான் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், சரியான பருவத்தில் தென்மேற்குப் பருவமழை பெய்யாமல் பருவம் தவறி பெய்த

மழை, புயல் காரணமாக வடமாநிலங்களில், இந்த ஆண்டு பருப்பு உற்பத்தி பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.



வர்த்தகர்களின் கூற்றுப்படி இந்த ஆண்டு 20 சதவிகிதம் அளவுக்குப் பருப்பு உற்பத்தி குறைந்துள்ளது. வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் பருப்பு பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசு 35 முதல் 40 லட்சம் டன் பருப்பை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும். தற்சமயம் நவராத்திரி, தீபாவளி போன்ற பண்டிகைகள் தொடர்ந்து வருவதால் பருப்புக்கான தேவை அதிகமாக உள்ளது. மத்திய அரசு துரிதமாகச் செயல்பட்டு தேவையான அளவுக்கு பருப்பை இறக்குமதி செய்தால், விலையைக் கட்டுப்பாட்டில் வைக்கலாம்" என்றார்.

## 5800 டன் பருப்பு பறிமுதல்: மத்திய அரசு நடவடிக்கை!

**புதுடெல்லி:** பதுக்கல் நபர்களிடம் இருந்து 5800 டன் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்புகளின் விலை, தீபாவளிக்கு முன்னதாகவே மிக வேகமாக உயர்ந்து பொதுமக்களை வாட்டி வதைத்து வரும் நிலையில், மத்தியப்பிரதேசம், தெலுங்கானா உள்ளிட்ட 5 மாநிலங்களில் மட்டும் பதுக்கல்காரர்களிடம் இருந்து 5800 டன் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் தெரிவித்துள்ளார்.



நாடு முழுவதும் துவரம் பருப்பின் விலை 200 ரூபாயை தாண்டி உயர்ந்துவரும் நிலையில், ஏற்றுமதியாளர்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதியை குறைத்தும், மொத்த கொள்முதல் செய்பவர்களுக்கு இருப்புவைக்க அனுமதிக்கப்பட்ட அளவீட்டை குறைத்தும் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுத்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த மாதங்களில் பதுக்கல் பேர்வழிகளுக்குச் சொந்தமான இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில், 5800 டன் பருப்பு வகைகள் பறிமுதல் செய்யப்பட்டதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் தெரிவித்துள்ளார்.

இன்று(செவ்வாய்) டெல்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை செயலர் தலைமையிலான ஆலோசனை கூட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் சி. விஸ்வநாதன், " தெலுங்கானா மாநிலத்தில் மட்டும் 2,549 டன், மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் 2,549 டன், ஆந்திராவில் 600 டன், கர்நாடகத்தில் 360 டன் பருப்பும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இன்றும் கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பல இடங்களில் இதுபோன்ற அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.இதில் நல்லபலன் கிடைத்து வருகிறது" என்று கூறினார்.

**'எதிர்காலம் தானியங்கள் விளைவிக்கும் நாடுகளுக்கே; ஆயுதங்கள் வைத்துள்ள நாடுகளுக்கு இல்லை!'**



வாஷிங்டன்னில் சிந்தனையாளர்கள் மாநாட்டில் இதுதொடர்பாக ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசிய அவர், " உலகில் வேளாண்மைத் துறைக்கு மிக அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அறிவியலுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அறிவியல் அமைப்புகளுக்கு அதிகமான சுயாட்சி அதிகாரம் இருக்க வேண்டும். பட்டினியற்ற சமுதாயத்தை உருவாக்க பொதுக் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இனிமேல், தானியங்கள் நிறைந்த நாடுகளுக்கே எதிர்காலம்; துப்பாக்கிகள் அதிகம் வைத்துள்ள நாடுகளுக்கல்ல. இந்தியாவில் விவசாயத்துக்கு உரிய கவனிப்பு அளிக்கப்படுவதில்லை. இதுதொடர்பாக, பிரதமர் நரேந்திர மோடியின் நோக்கங்கள் நல்லதாகவே இருக்கின்றன. ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அந்த நோக்கத்தின் பிரதிபலிப்பு இல்லாமல் போய்விடுகிற சூழல் உள்ளது. குறிப்பாக, மக்களின் அத்தியாவசியத் தேவைகளை அவர்களுக்கு செலவே இல்லாமல் பூர்த்திசெய்து வரும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் சமூக நல திட்டங்களைப்போல், நல்ல திட்டங்களின் மூலம் சமூகப் பாதுகாப்பை நிலைநிறுத்தி, அதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

நீடித்த முன்னேற்றம் என்ற இலக்கை அடைவதற்கு ஆரோக்கியமான பெருங்கடல்களின் நீராதாரம் மிகவும் முக்கியமானது. நமது பூமியில் 97 சதவீதம் நீர் சூழ்ந்துள்ளது. எனவே, இயற்கை வளங்களை பாதுகாத்து, தீவிரமாக உழைத்தால் ஏராளமான உணவுப்பொருட்களை விளைவிக்க நம்மால் முடியும்.

சரியான சேமிப்பு முறைகள் பின்பற்றப்படாததால் உணவுப்பொருட்கள் வீணாவது அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதன்மீது அதிகக் கவனம் செலுத்தி, உணவுப்பொருள்களின் இழப்பைத் தடுப்பது தொடர்பான நடவடிக்கைகளில் நாம் முதலில் கவனம் செலுத்த வேண்டும்" என்று கூறினார்.